
உ

ஸ்ரீ வேதநாராயணப்பெருமாள் கோவில்,

திருநாராயணபுரம் P. O., திருச்சி மாவட்டம்.



திருநாராயணபுரத் தல வரலாறு


தேவஸ்தான வெளியீடு

1979

ஸ்ரீ:

ஸ்ரீ வேதநாராயண பரப்ரும்மணே நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருநாராயணபுரத் தலப்பெருமை

1978

நிர்வாக அதிகாரி

அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில்

திருநாராயணபுரம் P.O.,

திருச்சி மாவட்டம் – 621 203.

கோயில் வெளியீடு

விலை 1–00

முகவரி :

திருநாராயணபுரம் (அஞ்சல்) - 621 203

வழி — பாலசமுத்திரம்,

திருச்சி மாவட்டம்.

தலம் பற்றிய சுருக்க விபரம்

கோயில் கட்டிய காலம் வரையறுக்க முடியவில்லை. கி.பி. 1207-க்கு முன் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

பிள்ளைத்திருநரையூர் அரையரின் அபிமானத் தலம்.

சொத்து விபரம் :—		ஏக்கர்.	செண்ட்
நஞ்சை நிலங்கள்	...	116	43
தென்னந்தோப்புகள்	...	30	96

ஆண்டு வருவாய் சுமார்	ரூ. 1,85,000/-
ஆண்டுச் செலவு	ரூ. 1,75,000/-
தற்சமயம் கோயிலில் உள்ள முதலீடு	ரூ. 80,000/-
கோயிலின் நகைகளின் மொத்த மதிப்பு	ரூ. 50,000/-

சேவார்த்திகள் வசதிகள் :—

தங்கும் விடுதி அறை 1-க்கு நாள் வாடகை ரூ. 5/- கல்யாண மண்டபம் வாடகை ரூ. 35/- (பாத்திரம் உட்பட) 2 சேவார்த்திகளுக்கு மதிய உணவு வழங்கப் படுகிறது. சேவார்த்திகள் படிப்பதற்கு ஒரு நூல் நிலையம் இயங்கி வருகிறது.

இக்கோயில் அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் ஓ.ஏ. 13/1958 நாள் 22—8—1958ல் வகுக்கப் பட்டுள்ள நிர்வாகத் திட்டப்படி நிர்வாகம் நடைபெறு கிறது. உள்துறை 34, அலுவலகத்தில் 5 ஆக 39 பணி யாளர்கள் உள்ளனர். கடைசியாக 27—4—1966ல் மகா சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது.

முகவுரை

"நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
"நாராயணா" என்னும் திருநாமம்"

என்ற ஆழ்வார் கூற்றுக்கிணங்க இவ்வுலகத்து உயிர்களுக் கெல்லாம் தோன்றாத் துணையாக இயங்கி நல்லறம் காத்து வருவது "நாராயணா" என்னும் திருநாமமேயாகும். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற நம் வழி வந்த மரபுக்கேற்ப, நாகரீக சந்ததிகளுக்கு வெகு தூரத்துக் கப்பால் "வான் பொய்ப்பினும் தான் பொய்யாத" காவிரிக் கரையில், "பச்சை மாமலைபோல் மேனி" கொண்டப் பெருமாளின் திருமேனி போன்றே எங்கும் பச்சைப் பசேர் என்ற வயல் வெளிகளும், நெடிதுயர்ந்த மரங்களும் கொண்ட தோர் எழில் சூழ் கிராமத்தில் பள்ளிக் கொண்டுள்ளார் வேதநாராயணப்பெருமாள்.

"நீலத்திரை கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் யும்" குமரித் தாயார் குடி கொண்ட, முக்கடல் முனையிலே ஞானத்தவம் பூண்டிருந்தார் விவேகானந்தர். அதே விவேகானந்தர், அகன்று பரந்து கடலென ஓடும் இங்குள்ள காவிரிக் கரையையும் நிம்மதியான இயற்கையின் எழில் மிகு சூழ்நிலையை... நைத்திறனல் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரவல்ல இத்திருத்தலத்தை கண்டிருந்தால் இந்த இடத்தையே தனது ஞானத் தவத்திற்கு தேர்ந்தெடுத்திருப்பாரோ என்று ஐயுறும் வண்ணம் அமைந்துள்ளது இந்தத் திருநாராயணபுரத்தின் கை புனைந்தியற்று கவின் பெறும் வனப்பு.

இங்கு தானும் நிம்மதியான இடத்தில் பள்ளி கொண்டு, தன்னை வந்து வணங்குவாருக்கும் நிம்மதியைத் தருகின்றார் வேதநாராயணப்பெருமாள் தேவியர் இருவர் பாதத்திலமர்ந் திருக்க, பிரஹலாதனுக்கு அருள் வழங்கி, நான்கு வேதங்களை யும் தலையணைகளாகக் கொண்டு ஆதிசேஷனின் அரவணையில் துயில் கொண்டுள்ளார் பெருமாள்.

பிறர் கையை எதிர்பாராத சுதந்திரப் பெருமாள் தனக்கென திரண்ட சொத்துக்களை காவேரிக்கரையில் அமர்த்திக் கொண்டு அரசின் சட்ட திட்டங்களுக்கும் இடங்கொடுத்துக் கொண்டு, இன்றும் தன் காரியங்களையும் திருவிழாக்களையும், பழமை மாருமல், பண்பு குறையாமல் நடத்திக் கொண்டு, புன்முறுவலுடன் காட்சி தருகின்ருர்.

சேலம் - திருச்சி சாலையில் உள்ள தொட்டியத்திலிருந்து 2 மைல் தொலைவில் உள்ளது திருநாராயணபுரம்.

இந்நூல் வெளிவர பல்லாற்ருனும் பணிபுரிந்த உயர்திரு **என். எஸ். தாத்தாச்சாரியார்** (தஞ்சை பாவைப் ப்ரவசன பூஷனம்) அவர்களுக்கு எங்களது இதயங்கனிந்த நன்றி.

இந்நூலுக்கு ஆதாரங்கள் கொடுத்து உதவிய இத்திருக்கோயில் அர்ச்சகர்களுக்கும் ஊர் பிரமுகர்களுக்கும் நன்றி. இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய முன்னுள் தஞ்சை துணை ஆணையர் உயர்திரு ஏ. **மார்கண்டவேல்ராஜன்** அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலை அழகிய முறையில் வெளியிட்டுள்ள திருச்சி நோபிள் அச்சக உரிமையாளர் திரு. **கு. கோவிந்தராஜுலு** அவர்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக்கொள்கின்ருேம்.

ஒருமுறை திருநாராயணபுரம் வந்து வேதநாயகி சமேத வேதநாராயணப் பெருமாளை தரிசித்தவர்களுக்கு வைகுண்டம் சென்று வந்த பலன் உண்டு. திருவரங்கத்திற்கும் பழமையான தலமாக இத்தலத்தை கூறுகின்ருர்கள். இந்த வரலாற்றை அனைவரும் படித்துப் பயன் பெறுமாறு அன்புடன் வேண்டப்படுகின்ருர்கள்.

அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில்
திருநாராயணபுரம்

எஸ். மகாராஜன், பி.ஏ., பி.டி.,
நிர்வாக அதிகாரி

அணிந்துரை

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே !
ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே !

கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே.

மனிதனாகப் பிறந்த யாவரும் இன்பத்தையே தான் விரும்புவார்கள். இது இயற்கை. ஆனால் அதற்குத்தக்க செயலைச் செய்ய வேண்டாமா? முறையோடு செய்தால் எல்லாப் பலனையும் தரும் அல்லவா? மனச்சாந்தி ஏற்பட்டால்தான் இன்பத்தை அனுபவிக்கலாம், அந்தச் சாந்தி ஏற்படவேண்டுமானால் இறைவன் நாமத்தை எப்பொழுதும் ஜபித்துக்கொண்டிருக்க வேண்டும். இக்கருத்தையே நம்மாழ்வார் மேலே குறிக்கப்பட்ட பாசுர அடியில் "திண்ணம் நாரணமே" என்ற சொற்றொடரால் குறிப்பிட்டார், நாம பஜனை அளவற்ற பலனைத் தரவல்லது. திருமால் திருநாமங்களில் முக்கியமானவை மூன்றாகும். அம்மூன்றுக்குள் "நாராயணா" என்ற திருநாமமே குலம் தரும், செல்வம் தந்திடும். துயரைத் துடைக்கும் அருள் தரும். பெருநிலத்தையும் அளிக்கவல்லது. "எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர் வானமாளவே" எனவும் ஆழ்வார் திருவாக்கிட்டார். தகுதியற்ற அஜாமிளன் என்பவன் தன் பிள்ளையின் பெயரான நாராயணன் என்ற சொல்லைக்

கடைசிக் காலத்தில் சொல்லி மோக்ஷம் அடையவில்லையா? இந்தப் பெயரையே ஸ்ரீ வைணவர்கள் திருமந்திரம் என்றும், மூல மந்திரம் என்றும், மந்திரராஜ என்றும் திரு அஷ்டாக்ஷரம் என்றும் கௌரவமாக அழைப்பார்கள்.

இத்தகைய பெயரை சாதாரண கிராம மக்களும் நாளுக்குப் பத்துத் தடவையாவது சொல்லும்படியாக அதே நாராயணன் பெயரைக்கொண்ட ஊர் தான் திருநாராயணபுரமாகும். தலப் பெருமாளுக்கும் அதே நாராயணன் பெயர்தான். இந்த ஊர் திருச்சி மாவட்டத்தில் திருவரங்கத்துக்கு முக்காத தூரத்துக்கப்பால் தொட்டி யத்துக்குப் பக்கத்தில் உள்ளது. இதை ஆதிரங்கம் என்றும் வேதபுரி என்றும் அழைக்கிறார்கள். அகண்ட காவிரிக் கரையில் சோலையின் நடுவே குறுகுறுப்பாய் அமைந்த ஊராகும். இந்தப் பெருமாள் கோவில் முன்பு பனை மட்டை யால் வேயப்பட்ட சிறு கோவிலாக இருந்து இப்பொழுது பெரிய கல் தளியாக இருக்கிறது. ஸ்ரீ வைணவ ஆச்சாரியார் களுள் ஒருவரான பிள்ளை திருநறையூர் அரையர் இந்தப் பெருமாளைத் தீயினின்றும் காக்கக் குடும்பத்தோடு உயிர்த் தியாகம் செய்தாராம். பிரஹலாதனுக்குப் பிரத்தியக்ஷ மாகக் காட்சி தந்த பெருமான். இராமானுஜரும் இப்பெருமா ளிடம் ஈடுபட்டிருந்திருக்கலாம் எனவும் கூறுகிறார்கள். ஆழ்வார்கள் பாடல் இல்லையாயினும் ஆச்சாரியார்களின் ஈடுபாட்டிற்குக் குறைவில்லை. பெருமாள் அரங்கநாதனைப் போலவே தரிசனம் தருகிறார். இந்த ஊர் ஒரு மாடல் கிராமமாக செய்யவும் உள்ளது. சேலம் நெடுஞ்சாலையி லிருந்து ஒதுங்கியிருப்பதால் விஷயம் புரிந்தவர்களே இப் பெருமாளை சேவிக்க வருகிறார்கள். பொதுமக்கள் எல் லோரும் இத்தலத்தின் பெருமையை அறியப் பரப்ப வேண்டும். அக்கடமையில் கிராமத்திற்கும் அதிகப் பங்கு உண்டு. இந்தப் புண்ணிய தலத்திற்கு நல்ல முறையில் பழங்காலக் கருத்துக்களைச் சேகரித்துக் கோர்த்து ஓர் தல புராணம் எழுதப்படுகிறது என்பதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். குறைந்த விலையில் பொது

மக்கள் படித்துப் பயன்படும்படியும் பக்தர்கள் திரள் அதிகம் வரும்படியும் செய்யவேண்டும். திருமணம் செய்ய நல்லதோர் கல்யாண மண்டபத்தையும், விருந்தினர் விடுதியையும் தேவஸ்தானத்தார் கட்டியிருக்கிருர்கள். எல்லோரும் பயன்படுத்திக்கொள்ளலாம். ஸ்ரீ வேதநாயகி ஸமேத ஸ்ரீ வேதநாராயணன் திருவருளால் இந்த நூல் நல்ல முறையில் வெளிவந்ததை அறிந்து மகிழ்கிறேன். இத்தலத்தில் கோவில் துவஜஸ்தம்பத்தின் கீழே எழுந்தருளியிருக்கும் ஆஞ்சனேயர் மிகவும் வரப்ரஸாதி. இவரிடம் பக்திகொண்ட பக்தர்களுக்கு எல்லா நன்மைகளும் கிட்டி வருவதை அப்பக்தர்கள் நன்கறிவர். அவரையும் வழிபட்டு நாள்தோறும் நாம் நன்மை பெற்று வாழ்வோமாக.

A. மார்க்கண்டவேல்ராஜன்,
முன்னாள் துணை ஆணையர், தஞ்சை.
19—11—'66



ஸ்ரீ:
ஸ்ரீமதே நாராயணாய நம:

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
31.	கோயில் விளக்கம்	21
32.	முதல் பிரகாரம் (சுற்று)	21
33.	இரண்டாவது பிரகாரம் (சுற்று)	24
34.	திருப்பொன் மண்டபம்	25
35.	மஹா மண்டபம்	26
36.	அர்த்த மண்டபம்	26
37.	தீர்த்தங்கள்	28
38.	உத்சவங்கள் (திருவிழாக்கள்)	23
39.	தியான சுலோகங்கள்	31
40.	தலப் பெருமையை விளக்கும் செய்யுள்கள்	31
41.	வருமானமும்—சொத்துக்களும்	32
42.	சிற்பச் சிறப்பு	33
43.	இன்றைய ஊர்	33
44.	நிருவாகம்	34
45.	புராண வரலாறுகள்	34
46.	திருநறையூர் அரையர் (மோக்ஷம் பெற்ற) வரலாறு	37
47.	கல்வெட்டுகள்	39
48.	சாசனம் உள்ள இடமும் காலமும்	40
49.	கல்வெட்டுச் செய்திகள் வருமாறு	41
50.	துதிப் பாடல்கள்	44
51.	சில தனிச் செய்யுளும்—கட்டியமும்	46
52.	வேதநாராயணர் ஸ்தோத்திரப்பொருள்	47
53.	வெள்ளைச் சாற்றுப்படி	49
54.	ஆழ்வார்கள் திருநக்ஷத்திரங்கள்	51
55.	ஆழ்வார்களின் அம்சங்கள்	52
56.	தவிர்க்க வேண்டியவை	53
57.	முடிவுரை	54
58.	திவ்வியப்ரபந்தம் எண்ணிக்கை	55
59.	அநுபந்தம்	57
60.	திருக்கோயிலில் பணியாற்றிய அறங்காவலர்கள் காலமும்—பெயரும்	60
61.	திருக்கோயிலில் பணியாற்றிய நிர்வாக அதிகாரிகள் காலமும்—பெயரும்	62

ஸ்ரீ:
ஸ்ரீ வேதவல்லித்தாயார் துணை.
திருநாராயணன் திருவடிகளே போற்றி.
திருநறையூர் அறையர் இணை அடிகளே சரண்.

''குலம்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்''

''ப்ராதஸ்மராமி பவபீதி பயார்த்தி சாந்த்யை
நாராயணம் கருட வாகனம் அஞ்சனாபம் |
க்ராஹாபிபூதம தவாரணமுக்தி ஹேதும்
சக்ராயுதம் தருணவாரி ஜபத்ர நேத்ரம் || ''
''ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ராம்ய ஜமாதரம் முனிம் || ''

சிறு குறிப்பு

1. பெருமாள்

மூலவர் :— ஸ்ரீ வேதநாராயணன் நான்கு வேதங்களையும் தலையணைகளாகக்கொண்டு ஆதிசேஷன் மீது பள்ளிகொண்ட திருக்கோலம். (ஸ்ருஷ்டி ஸயனம்), திருவடிப் பக்கத்தில் பிரகலாதர் அமர்ந்திருக்கிறார் — கல்வெட்டில், திருநாராயணபுரத்து நாயனார் என்ற பெருமாள் பெயர் கூறப்பட்டுள்ளது.

உத்ஸவர் :— ஸ்ரீ வேதநாராயணன் அருளும், அழகும் கலந்த ஆனந்த உருவம்-நின்ற திருக்கோலம். வேதநாயகப்பெருமாள் என்று கொழுமத்தில் கரிவரத ராஜப்பெருமாள் கோயில் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

2. நாச்சியார் (அதிகாரார்ச்சை)

மூலவரும், உத்ஸவரும் ஸ்ரீ வேதநாயகி என்ற திருநாமத்துடன் செம்பதுமத்தில் அமர்ந்தாற்போல் வரத-அபயஹஸ்தங்களுடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் தனிக் கோயிலில் ஸேவை தருகிறார்கள்.

3. பூஜை விதானம்

(பாத்மஸம்ஹிதை)
பாஞ்சராத்திரம்

4. சம்பிரதாயம்

தென்னாசாரிய சம்பிரதாயம்

5. உகந்து அருளின ஆசாரியன்

திருநறையூர் அறையர் (குடும்பத்துடன்) இராமாநுசரும் உகந்தருளினார் என்பர். 33 கோடி தேவர்களும் திருப்பணிமாலை என்ற நூற்படிக்கு மணவாளமாமுனிகள், 48 ஆயிரம் ரிஷிகள், பிருது சக்கிரவர்த்தி, சிபி சக்கரவர்த்தி முதலானோர்கள் இப்பெருமாளை உகந்து வழிபட்டுள்ளார்கள் எனத் தெரிய வருகிறது.

6. தல வகை

புராணப் புகழ்பெற்றது. பிர்மாண்ட புராணத்தில் இத்தலப் பெருமை கூறப்பட்டுள்ளது. கருடனால் ஸ்தாபிக்கப்பட்டது. பிள்ளைத் திருநறையூர் அறையருக்கும் அவர் குடும்பத்துக்கும் மோக்ஷம் அருளப்பட்ட தலமாகும்.

7. தலப் பெயர்

திருநாராயணபுரம், ஆதிரங்கம், வேதபுரி.

8. தீர்த்தங்கள்

வேத தீர்த்தம், குச தீர்த்தம், அசுவத்த தீர்த்தம். பத்ம தீர்த்தம், திருப்பாற்கடல், அகண்ட காவிரி என ஆறு. திருப்பாற்கடல் என்ற தீர்த்தம் இன்று காணப்படவில்லை.

9. தினப்படி பூசை

கால சந்தி, உச்சிக்காலம், மாலை—சாயரட்சை அர்த்த ஜாமயாமம்) என 4 வேளைகள்.

10. சுற்றுக் கோயில்கள்

ஊருக்குத் தென் மேற்கே இதே தேவஸ்தானத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள ஸ்ரீ மாரியம்மன் கோவில்.

11. மண்டபங்கள்

பெருமாள் சன்னதி அர்த்த மண்டபம், மகா மண்டபம், திருப்பொன் மண்டபம், தாயார் சன்னிதியில் மூன்று மண்டபங்கள், ஆண்டாள் சன்னிதி மண்டபம், வாகன மண்டபம், இரண்டு நால் கால் மண்டபங்கள், கருட மண்டபம் முதலிய பத்து மண்டபங்கள்.

12. பிரகாரங்கள்

தேர் ஓடும் வீதி, உள்பிரகாரம் என இரண்டு.

13. பழமொழி

நாளும் நினைத்திடு நாரண புரத்தை.

14. தல விருக்ஷம் (மரம்)

வில்வ மரம்.

15. கோபுரங்கள்

மூன்று கண்கள் கொண்ட இராஜ கோபுரமும் மற்றும் மூன்று விமானங்களும் (பெருமாள் விமானத்திற்கு வேத விமானம் எனப் பெயர்.)

16. கோயிலுக்குள் சிறு சன்னதிகள்

(1) கண்ணன் சன்னதி (2) ஆழ்வார் ஆசாரியார்கள் சன்னதி (3) மடைப்பள்ளி நாச்சியார் சன்னதி (4) தாயார் சன்னதி (5) ஸ்ரீ ஆண்டாள் சன்னதி (6) ஸ்ரீ கருட மண்டபம் ஆஞ்சநேயர் சன்னதி (7) ஸ்ரீ கருடன் சன்னதி (8) ஸ்ரீ சரஸ்வதி பீடம்.

17. கோயில் பிரிவு

"ஏ" பிரிவு கோயில். சென்னை அற நிலையப் பாதுகாப்பிலாக்காவின் மேற்பார்வையில் மூன்று அறங்காவலர்களாலும், அரசாங்கத்தாரால் அமர்த்தப்பட்ட ஒரு இறைபணியாளரின் ஆளுகையில் உள்ளது.

18. கோயில் வருமானம்

தற்சமயம் கிட்டத்தட்ட வருடம் சுமார் இரண்டு லக்ஷ ரூபாய் வருமானம் உள்ளது. திருவாபரணங்கள் மதிப்பு சுமார் 50,000 மட்டும்.

19. தல புராணம்

பிர்மாண்ட புராணத்தில் பிர்மா நாரதருக்கு உபதேசம் செய்ததாக வரும் பகுதியில் உள்ள நூல். (அரசாங்கத்தின் பிரதி R. No. 1554-ல் உள்ளது) இதைத் தவிர 1953-ல் வெளியிடப்பட்ட "திருநாராயண புரம் கோயில்" வரலாறு என்ற தமிழில் எழுதப்பட்ட சிறு புத்தகம்.

20 திருப்பணிகள்

நாயக்க அரசர்களும், கோன் தேரின்மை கொண்டான் முதலிய அரசர்கள் ஆதியில் திருப்பணி செய்தார்கள். இக்கோயிலின் திருப்பணிகள் பல அவ்வப்பொழுது நடந்து வந்திருக்கின்றன. ராஜகோபுர வாயிலின் கதவு சுமார் 120 வருடங்களுக்கு முன்பு (கலி. 4933 நள வருடம் மாசி–மீ 21௨) போடப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. பிறகு அண்மையில் 1949-ல் ராஜ கோபுரம் விமானங்கள், திருப்பொன் மண்டபம் முதலியவை புதுப்பிக்கப்பெற்றும், தள வரிசை போடப்பட்டும், இறைபணியாளர் அலுவலகம், பெரிய தகரக் கொட்டகை, விருந்தினர் விடுதி, ஸ்ரீ ஆண்டாள் கல்யாண மண்டபம், கோவிலுக்கெதிரில் மதில் சுவர் சீர்படுத்தல், சலவைக் கல்லில் திருப்பாவைப் பாசுரங்கள் பொறித்தல் முதலியவை நடந்தன. முதலில் 28—10-49ல் வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் நடந்தது. பிறகு மாரியம்மன் கோயில் திருப்பணி செய்யப்பட்டு 13—6—51ல் கும்பாபிஷேகம் நடந்தது. கடைசி முறையாக 27—4—66ல் விமரிசையான கும்பாபிஷேகமும் நடந்தன.

21. வாகனங்கள்

அன்னம், சிம்மம், சேஷன், கருடன், ஆஞ்சநேயர், யானை, குதிரை வாகனங்களும், தோளுக்கினியன், பல்லக்கு, திருச்சிவிகை முதலியவைகளும்.

22. திருவிழாக்கள்

ஏகாதசிகள், அமாவாசை, திருவோணம், மாதப் பிறப்பு என்னும் நான்கு விசேஷ தினங்களில் பெருமாளுக்கு திருமஞ்சன ஆஹனமும், சித்திரை முதல் எல்லா மாதங்களிலும் பெருமாளுக்குப் பல உற்சவங்கள் மிக விமரிசையாக நடந்து வருகின்றன. தனித் தலைப்பில் விளக்கத்தைப் படித்தறியலாம்.

23. சமயப் பிரச்சாரம்

திருவிழாக் காலங்களில் தக்கோர்களைக்கொண்டு சமய சம்பந்தமான சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு

வருகின்றன, இதைத் தவிர தேவஸ்தானத்தார் சமய சம்பந்தமான நூல்கள் பல அடங்கிய நூல் நிலையம் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

24. நிர்வாக அதிகாரி

S. ஆறுமுகம், B. A.,

25. யாத்ரிகர்களுக்கு வசதி

மிகவும் பொருட் செலவில் ஸேவார்த்திகள் வந்து தங்க நவீன வசதிகளுடன் கூடிய ஓர் "விருந்தினர் இல்லம்" அண்மையில் கட்டப்பட்டுள்ளது. இதைத் தவிரவும் மிக சௌகரியமாய் திருமணங்கள் நடத்த எல்லாவிதமான சௌகரியங்களுடன் கூடிய ஸ்ரீ ஆண்டாள் கல்யாண மண்டபமும் கட்டப்பட்டுள்ளன. தேசாந்த்ரிகளுக்கு உணவுக்கு தேவஸ்தானத்தார் அண்மையில் வசதி செய்துள்ளனர். நேரடியாகத் திருச்சியிலிருந்து கோவிலுக்கு வந்து செல்ல பஸ் வசதி உள்ளது.

26. காட்சி தரப்பட்டவர்கள்

கருடன், பிரகலாதன், சுக்ரீவன் முதலியோர்களுக்கு காட்சி தரப்பட்ட இடம். பிரமன், பிரகலாதன், சுக்ரீவன், கருடன், அனுமான், அறையர், சோழ மன்னன் முதலியோர்களால் ஆராதிக்கப்பட்ட பெருமாள் எனவும் கூறப்படுகிறது. பிரகலாதனுக்குப் பெருமாள் சித்திரை, பூர்வ பக்ஷம், அஸ்த நக்ஷத்திரம், புதன்கிழமை, சப்தமி திதி, அருணோதய வேளையில் வேத விமானத்துடன் காட்சி தந்தது.

27. அபிமான ஸ்தலம்

திருவெள்ளரை என்ற திருவரங்கத்திற்குப் பக்கத்திலுள்ள திவ்ய தேசம்.

ஸ்ரீ :
அரவணையில் பள்ளிகொண்ட அமுதமே வாழியவே :

''ஞாலத் தூடே நடந்தும் நின்றும் கிடந் திருந் தும்
சாலப் பல நாள் உகந் தோறு உயிர்கள் காப்பான
கோலத் திருமா மகளோடு உன்னைக் கூடாதே
சாலப் பல நாள் அடியேன் இன்னும் தளர்வேனோ''

''நாராய ணாய நளி னாயத லோ சநாய
நாமா வ சேஷித மஹாபலி வைபவாய
தாநா சரா சர வி தாய க ஜன் ம தேச
நாபீ புடாய புருஷாய நம : பரஸ் மை || ''

கோயில் விளக்கம்

ஆகம முறையையும், ஆஸ்திகர் வழக்கத்தையும் பின் பற்றிப் பெரியோர்கள் பகவானை அ னு கி ஸேவிக்கும் (தரிசிக்கும்) முறையில் வெளிப்ரகாரமாகிய தேரோடும் தெருவில் இருந்து வலப்பக்கச் சுற்றுடன் கர்ப்பகிரகம் வரை விளக்கம் தரப்பட்டுள்ளது.


நாட்டுச் சிறப்பு

ஆழி சூழ்ந்த இந்த அவனியில் இலக்கிய வளத் தாலும், ஆன்ம அறிவின் வளர்ச்சியாலும் சிறந் தோங்குவது நம் பழைய பாரத நாடாகும். அந்நாட் டின் கலை, கல்வி, சிற்பம், கோயில், வளம், பண்பாடு முதலியவற்றால் முந்தி நிற்பது நம் தமிழ் நாடாகும். இப்புண்ணிய நாட்டில்தான். வான் பொய்த்தாலும், தான் பொய்க்காத பொன்னி என்ற காவிரி தாவி ஓடுகிறது. இக்காவிரியின் நீரிலே ஓங்கி வளர்கின்றன பயிர்கள். உயர்ந்து விளங்குகின்றனர் சான்றோர். செந்தமிழும், தெய்வத் தமிழும் கொழிக்கின்றன.

மாலுகந்த ஆசிரியர்களான பல ஆழ்வார்கள் அவதரித்தார்கள். குழலினும் இனிய திவ்விய பிரபந்தப் பாக்களைப் பாடி ரீங்காரம் செய்தார்கள். மாயவனுடைய திவ்விய வடிவழகில் ஆழ்ந்தார்கள். அவனுடைய கல்யாண குணங்களில் தாழ்ந்தார்கள். உண்ணும் பொழுது வாயை மறப்பதுபோல் தம்மையே மறந்து மயங்கி நின்றனர். இவர்களின் திருவாக்கால் தமிழ் மாலை நோய்க்குக் காலை மருந்தாய் இருக்கிறது· உருவ வழிபாட்டை உறுதிப்படுத்தி உறுதி பயக்கும் உத்தமன் திருக்குணங்களைச் சங்கத் தமிழில் இவர்கள் பாடியதே அயர்ந்து உறங்கும் மக்களுக்குக் காலைச் சங்கநாதம் ஆயிற்று. இவர்களே, உள்ளத்தின் உயர்வைக் குறிக்கும் வானளாவிய கோபுரங்களும், பரந்த அறிவை வளர்க்கும் படர்ந்த மண்டபங்களும், கற்பனைத் திறத்தைக் கதையாகச் சொல்லும் கருங்கல் சிற்பங்களும் அமைந்தும், சமைந்தும் காணப்படும் கோயில்கள் தோறும் பொன்னடி சாற்றிக்கல் கோவில்களுக்கு, கனகக்கவசம் போன்ற கவிதை வேய்ந்தனர்.

உருவ வழிபாடு

விஷ்வக் ஸேன ஸம்ஹிதை என்னும் நூலில் "மமப்ரகாரா ; பஞ் சேதி ப்ரா ஹுர் வேதாந்த பரகா" (என்னுடைய தோற்றங்களை ஐந்து விதம் என வேதாந்திகள் கூறுவார்கள்) எனப் பகவான் திருவாக்கு இட்டபடிக்கே. எம்பெருமான் அடியார்களின் காட்சிக்கும், கருத்துக்கும் எளிதில் விளங்கும்வண்ணம் **"பரம் வியூகம், விபவம், அந்தர்யாமி, அருச்சை"** எனத் தன்னையே ஐந்து விதமாக ஆக்கிக் காட்சி தருகிறான். இந்த ஐந்தில் **பரமாவது** — நலம் அந்தம் இல்லதோர் நாடு என்ற வைகுண்டத்திலே நித்யர்களுக்கும், முக்தர்களுக்கும் உகக்கும் வண்ணம் எழுந்தருளி இருப்பது **வியூகமாவது** படைத்தல் காத்தல், அழித்தல் என்கிற முத்தொழிலைச் செய்வான் வேண்டியும், ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன ; அநிருத்தருய்க்கொண்டு திருப்பாற்கடலில் அமைந்த நிலையாகும். வாஸுதேவன் என்ற நிலையையும்



ஸ்ரீ வேதநாயகப்பெருமான்
உற்சவர்

சேர்த்து நான்கு எனவும் கூறுவார்கள். **விபவமாவது**– தம்மை ஒழித்த மற்றவர்களுடன் ஒருமித்து வேற்றுமை அகற்றி "மீனமை கோலநெடு நரசிங்கமாகி" என்றபடிக்கு அவதாரங்கள் எடுக்கும் நிலையாகும்.

இனி **அந்தர்யாமித்வமாவது**: – எல்லா சராசரங்களின் ஜீவாத்மாவின் உள்ளே உறைந்திருந்து, அச்சாணி சக்கிரத்தைச் சுழல வைப்பதுபோல் அவைகளை இயக்கிக்கொண்டிருக்கும் நிலையாகும்.

கடைசியான **அருச்சாவதாரமாவது** :— கோவில்களிலும், வீடுகளிலும் விக்கிரக வடிவங்களாகவோ அல்லது ஸாலக் கிராமங்களின் வடிவங்களாகவோ எழுந்தருளியிருந்து அந்தந்த மந்திரங்களைக்கொண்டு அந்தந்த வடிவங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு (அதாவது நிலையாக அமர்த்தப்பட்டு) பக்தர்கள், அடியார்கள் இவர்களின் கண்களுக்கும், கருத்துக்கும் அக்காரக்கனியாக சுவைக்கச் சுவைக்க இனியனாக எழுந்தருளியிருக்கும் நிலையேயாகும். "**ப்ரதிமாஸ்வ அப்ரபுத்தானாம்**" (அறிய ஆற்றல் அற்றவர்களுக்கு பிரதிமைகளில் ஈசன் எழுந்தருளி அருள் பாலிக்கிறான்) என்றபடிக்கு எவ்வகையாலும் பின்தங்கி உள்ளவர்களுக்கு இந்த உருவ வழிபாடே மிகவும் உகந்ததாகும் என்று பெரியோர்களின் முடிவான தீர்மானமாகும். அருச்சை என்ற சொல்லிற்கு பிரதமை அதாவது விக்கிரக வடிவம் என்றும் பொருள் உண்டானதால் இந்த வடிவங்களை ஆகம விதிப்படிக்கு சுதை, சிலை, மரம், உலோகப் பொருள்கள் முதலியவைகளில் பிரதிஷ்டை செய்து வழிபடுவது வழக்கம். இந்த உருவ வழிபாட்டின் சிறப்பை பற்றி பொய்கை ஆழ்வார் தமது முதல் திருவந்தாதியில்

> "தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
> தமர் உகந்தது எப்பேர் மற்றப்பேர்-தமர் உகந்து
> எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே
> அவ்வண்ணம் ஆழியானும்"

எனத் திருவாக்கிட்டார். பதியே பரவித்தொழும் ஆழ்வார்களான திவ்வியஸூரிகளுக்கு இந்த அர்ச்சாவதார அனுபவம் என்றால் முகிலைக்கண்ட மயில்கள் போலவும், நீரைக்கண்ட மீன்கள் போலவும், கதிரவனைக்கண்ட தாமரை போல் கொள்ளமாளா இன்ப வெள்ளமாக இருக்கும். இத்தகைய ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட (வழிபடப்பட்ட) தலங்களே திவ்வியத் தலங்களாகும். நம் தமிழ்நாட்டில் இத்தகைய திவ்வியத் தலங்களைத் தவிர பல புராணப் புகழ்பெற்றவைகளும், தேசுயர்ந்த ஆச்சாரிய வள்ளல்களின் உகப்பைப் பெற்றவைகளுமான தலங்களும் உள்ளன. ஆன்ம தத்துவ ரசிகர்களுக்கு ஆச்சாரியார்களின் உகப்பே தம் உகப்பாகும். இவ்வாறு புராணப் புகழ்பெற்றதும், ஆச்சார்ய வள்ளலின் உகப்பைப் பெற்றதுமான சிறந்த புண்ணியத்தலமே திருநாராயணபுரமாகும். இதுவே கதிரவனின் கால்கள் புகாது, எங்கும் சோலைகளாலும், வயல்களாலும் சூழப்பட்டு, கேசவன் திருவடி நிழல் போல் குளிர்ந்து விளங்கும் சிறந்த ஊராகும். பக்கத்தில் பக்திச் சுவையே பெருக்காறு எடுத்தாற் போல் அகன்று ஆழ்ந்து தாவி வரும் காவிரி மகாநதியே அனைத்துலகும் ஆளும் அத்தனும் ஸ்ரீ வேத நாராயணனுடைய திருவடிகளை வருடி ஆனந்த அலைகள் வீசி மகிழ்கிறது என்றால் இன்னும் அதிகம் சொல்லத்தான் திறன் ஏது? "அற்றபற்றர் சுற்றி வாழும் அந்தணீர்" அரங்கமே என்ற மழிசைவந்த சோதி பணித்தபடிக்கு மத்தியரங்கமாக விளங்கும் திருவரங்கத்தின் அருகில் ஆதிரங்கமாக அமைந்துள்ள புண்ணிய க்ஷேத்திரமே இது ஆவரண நீரின் நடுவே பள்ளிகொண்டான் என்ற பொருள்கொண்ட நாரணன் என்ற அரும் சொல்லால் அழைக்கப்படும் பரமன் இப்பொழுதும் இத்திருநாராயணபுரத்தில் நீரின் இடையே பள்ளிகொண்டு தம் பாத்வத்தைப் பறக்க விளக்குகிறான். திருவரங்கத்தில் பெரிய பெருமாள் என்ற அழகனும் அரங்கன் வேதச் சுருக்கமான ஓங்காரப் பிரவணத்தின் விழுப்பொருளாய் யோக நித்திரைகொண்டான் என்றால், இங்கு அப்

பரம்பொருளே நான்கு வேதங்களின் விரிந்த விழுப் பொருளும் தாமே என்றபடிக்கு அவ்வேதங்களையே தலைஅணைகளாகக்கொண்டு சிருஷ்டி நித்திரை புரிகிறுன். திருமணங்கொல்லையில் வழிப்பறியில் திவ்விய தம்பதிகளின் உபதேசம் பெற்ற மானவேல் பரகாலன் "கண்டுகொண்டேன் நாராயணு என்னும் நாமம்" என்று அரற்றினுர் என்றுல் இந்த எம் பெருமானைக் கண்களால் சேவிக்கப் பாக்கியம் பெற்ற பக்தி ரசிகர்கள் "கண்டுகொண்டேன் நாராயணன் திருமேனியை" என்றே பரவித் தொழுவார்கள். ஆஹா! அவன் திருவருள் போலும், அன்னை பெரிய பிராட்டியாரின் கடைக்கண் நோக்குவோனும் உள்ளத்தையும் குளிர வைக்கும் பேரின்பகரமான சூழ்நிலையை இப்புண்ணிய நிலத்தில் அனுபவிக்கலாம். இதே பெயரில் மைசூர் ராஜ்யத்திலும் மேலக் கோட்டையில் ஒரு புண்ணியத் தலமுள்ளது. அத் தலத்திற்கு ஸ்ரீ இராமானுசன் பொன்னடி பட்டதால் சிறப்பு ஏற்பட்டதுபோல், இத்தலத்திற்கும் யதிகட்கு இறைவன் எதிராசன் பொன்னடி படர்ந்த பெருமை உண்டு. முன்பு சமயக் குழப்பம் மலிந்திருந்த காலத்தில் ஸ்ரீ இராமானுசன் மேலக் கோட்டை திருநாராயணபுரம் எழுந்தருளத் திருவுள்ளம்கொண்டு இத்தலத்தில் வீற்றிருந்து ஈருலகம் தனிக்கோலோச்சும் நம் அப்பன் ஸ்ரீ வேதநாராணனைக் கண்ணுல் ஒற்றி, கருத்தால் புசித்து மங்களாசாஸனம் செய்து காஷாயம் (காவி ஆடை) களைந்து வெள்ளை சாற்றுபடி (வெள்ளை ஆடை உடுத்தல்) ஏற்ருர் என்றும் தலத்துப் பெரியோர்கள் கூறுகிருர்கள். ஸ்ரீ பாஷியகாரரான இராமானுசன் வெள்ளைச் சாற்றுபடி ஏற்ற சரித்திரம் குரு பரம்பரை நூலில் திருவரங்கத்தில் நடந்ததாக விளக்கக் கூறப்பட்டுள்ளது.

இத்தலபுராணத்திலும் பிறிதோர் பக்கத்தில் இச் சரித்திரம் குறிப்பாக எழுதப்பட்டுள்ளது, வாசகர்கள் படித்தறியலாம். இந்த வெள்ளைச் சாற்றுபடி

சரித்திரம் இவ்வூரில் நடந்தேறியதாகத் தலப் பெரியோர்கள் கூறுவதை ஒப்புக்கொண்டு நோக்கினுல், ஸ்ரீ இராமானுசன் திருவரங்கத்திலே எழுந்தருளி சித்தாந்தஸ்தாபனம் செய்துகொண்டிருந்தபொழுது இந்த க்ஷேத்திரத்திலிருந்த பல பெரியோர்கள் உடையவரின் காலக்ஷேப கோஷ்டிகளில் பங்குகொண்டு ஆச்ரம கைங்கர்யம் செய்து வந்தார்கள் என்றும், அடிக்கடி ஸ்ரீ இராமானுசருடைய திருவடி சம்பந்தம் பெற்ற ஆசாரியர்கள் திருவரங்கத்திற்கும், திருநாராயணபுரத்திற்கும் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தார்கள் என்றும் கூறப்படும் வாய்வழி வரும் வரலாறும் ஒருபுடை ஏற்கத்தக்கதாக இருக்கும். இக்கருத்துக்களின் உண்மை விபரத்தைப் பெரியோர்களிடம் அடிபணிந்து அறியலாம், ஸ்ரீ இராமானுசன் இத்தலத்தை உகந்தார் என்பது மட்டுமின்றி, முன்பு பரம காந்தியாய், ஆசார்ய வள்ளலாய் விளங்கிய இராமானுசரது திருவடி சம்பந்தம் பெற்ற பிள்ளைத் திருநறையூர் அரையர் என்ற மகானும் இத்தலத்து எம்பெருமானிடம் ஈடுபட்டு குடும்பத்துடன் ப்ராண த்யாகமே செய்தார் என்ற ஏற்றமும் இத்தலத்திற்கு உண்டு, திருநாராயணபுரத்தைப்பற்றி "பிள்ளைத் திருநறையூர் அறையரும் ப்ரேமபாரவச்யத்தாலே கைங்கர்யோபகரமான திருமேனியை அழிவுக்கிட்ட சாக்காக்கி உபதேசித்தார்கள்" என்ற ஸ்ரீ வசனபூஷண உரையான ஆய்ப்பாடி ஸ்ரீ சூக்தியில் வரும் மேற்கோளாலும் இத்தலம் திருநறையூர் அறையரால் உகப்பட்டதற்குச் சான்ருகும். இவ்வாறு மற்றும் பல ஆச்சாரியரத்தினங்களும் இத்தலத்தை மிக உகந்து மகிழ்ந்தார்கள் எனவும் தெரிய வருகிறது. மற்றும் சில ஸ்ரீ வைணவ ஆச்சாரியார்களும் இத்தலத்து எம்பெருமானை வழிபட்டுக் காஷாயம் தரித்தார்கள் என்ற வழக்கும் உண்டு.

கோயில் விளக்கம்

விண்ணுட்டிலும் நன்னுடாய் ஓர் பரம காந்தியைப்போல் காவிரிக்கரையில் சோலையின் நடுவே புள்ளியர் கண்கள் படாவண்ணம் ஆச்ரமவாசிபோல் வாழும் இந்தப் புனிதமான ஊரின் நடுவே, ஸ்கஸ்ர தளபதுமத்தின் நடுவே பொரிவண்டு கண்படுத்தாற் போல் மிகவும் கம்பீரமான ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில் தென்படும். இக்கோயிலை பார்த்த கண்கள் பரவசமாகும். பதிந்த மனம் இன்னிசைப் பாடித் திரியும். இரண்டு பிரகாரங்கள் (தேரோடும் வீதியுள்பட) கொண்ட அழகான திருக்கோயிலாகும். அகண்ட காவிரிக் கரையில் அமைந்த கார்முகில்வண்ணன் கோயிலாகும். இத்தலத்திற்குத் தெற்கில் காவிரியின் தென்கரையில் சிந்தலவாடி என்னும் இடத்தில் பிரகலாதன் நேரில் வழிபட்டதாகக் கூறப்படும் ஸ்ரீ நரசிங்கப்பெருமாள் சன்னிதியும் உள்ளது. அந்த இடத்தில் பிரகலாதனுக்கு நரசிங்கப்பெருமாளுய் சேவை தந்த பெருமாள் அதே பிரகலாதனுக்கு இத்தலத்தில் நரசிங்கமாகிய நான் நாராயணனே என்று உரையாடுவது போல் ஸ்ரீ வேதநாராயணுகக் காட்சி தந்தாராம். தேரோடும் வீதியின் கிழக்குத் தெருவிலே பெருமாள் சன்னிதிக்கு எதிரில் பெரிய தேரும், தேர் மண்டபமும் உள்ளன. அந்தத் தேர் மண்டபத்திற்கு அடுத்த கீழ்ப்பகுதிக்கு "கனகாம்பாள் சமுத்திரம்" எனப் பெயர். அது ஒரு தனி ஊர்போல் பெயரளவில் தோன்றினுலும் கோவிலுடன் சேர்ந்த ஊர்போலவே இருக்கும்.

முதல் பிரகாரம் (சுற்று)

முதல் பிராகாரமான இத்தேரோடும் வீதியின் தென் மேற்கில் இதே தேவஸ்தானத்தைச் சேர்ந்த மாரியம்மன் கோவில் ஒன்று உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வருஷப்பிறப்பு நாளில் பூச்சொரியல் திருவிழாவும், சித்திரை மாதம் 10 நாட்கள் திருவிழாவும்

பதினொன்றும் நாள் சிறப்பான புஷ்பபல்லக்கும், ஆனியில் அபிஷேகத் திருவிழாவும், கார்த்திகை மாதம் ஊர்ச்சாத்துரை அபிஷேகமும், மார்கழியில் தனுர் மாத பூஜையும் இவ்வாறு இந்த அம்மனுக்குத் திரு விழாக்கள் நடைபெறுகின்றன.

இம்மாரியம்மனை இந்த ஊரின் பாதுகாப்புத் தேவதையாகவும் கூறுவதுண்டு. இந்த அம்பாள் மிகவும் சக்தியுள்ள அம்மனாகக் கொண்டாடப்பட்டு வருகிறாள். தெற்கு வீதியில் தான் பட்டர்கள், ஸ்தானீகர்கள், தீர்த்த மரியாதைக்காரர், கோயில் இறைபணியாளர் முதலியவர்களின் திருமாளிகைகள் உள்ளன. மேற்குப் பிரகாரத்தில் இப்பொழுது சிற்சில வீடுகளும், கடைகளுமே உள்ளன. முன்பு இங்கும் பல திருமாளிகைகள் இருந்தனவாம். வட மேற்கு மூலையில் தேவஸ்தானத்தாரால் அண்மையில் மிகவும் பொருட் செலவில் எல்லாவிதமான தற்கால வசதிகளுடன் கட்டப்பட்ட "விருந்தினர் இல்லம்" என்றதொரு கட்டிடம் தென்படும். வடக்கு வீதியில் கிராமத்தைச் சேர்ந்தவர்களின் சில குடிசைகள் உள்ளன. வடக்குப் பிரகாரத்தில் கோவில் மதிலை ஒட்டி, கோவிலுக்குள் நேரே செல்லும் ஒரு பாதை யுடன் கூடிய "ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாண மண்ட பம்" இருக்கிறது. இதுவும் சமீபத்தில் மிகுந்த பொருட் செலவில் தேவஸ்தானத்தாரால் புத்தம் புதிய வண்ண மாளிகையாகக் கட்டப்பட்டுள்ளது இங்குப் பொதுமக்கள் கல்யாணம் செய்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இன்னும் பலர், பெருமாள் திருக்கண் சாயைபடும் இம்மண்டபத்தில் மிக சௌகரியமாகக் கல்யாணங் கள் நடத்தி வருகிறார்கள். இவ்வாறு செய்யப்பட்ட இப் பொதுஜன நலத்தை எல்லோரும் பாராட்டி வருகிறார்கள். வடகிழக்கில் இப்பொழுது "பூமரத் துக் களம்" என்று கூறப்படும் நெற்களத்தில் முன்பு "பூமரத்துக்குளம்" என்றதொரு குளம் இருந் ததாம். ஆனால் இப்பொழுது அங்கு குளம் இல்லை. தாயார் சன்னதியின் கர்ப்பகிருஹ வரிக்கல்லில் "மாசி

மாதத்தில் தெப்போத்சவம் கண்டருளப் பண்ண வேண்டும்" என்ற கல்வெட்டு தென்படுவதாலும் கோவிலுக்கு அருகே தற்சமயம் வேறு குளம் இல்லாமையாலும் இன்று பூமரத்துக்களம் என்று கூறப்படும் களம் இருக்கும் இடத்திலே குளம் ஒன்று கட்டாயம் இருந்திருக்க வேண்டும் என்று ஊர்ப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே பூமரத்துக் குளம் என்ற சொல்லே பிறகு பூமரத்துக் களமாக மருவி வழக்கில் வந்தது போலும் என்று கொள்வோமாக. இங்கு நத்தம் மேட்டிலிருந்து கருப்பண்ண சுவாமியை எடுத்து வந்து உதிய மரத்தடியில் பச்சைப்பந்தற் போட்டு கிராமத்து மக்கள் பூஜை செய்வதுண்டு. கோவிலுக்கு எதிரில் ஒரு நாற்கால் மண்டபம் உள்ளது. சில திருவிழாக்களில் இந்த மண்டபத்தில் பெருமாளுக்கு திருவந்திக் காப்பு தீப ஆரத்தி நடைபெறும்.

பிறகு கோவிலுக்கு நுழைவாயிலில் மதில் சுவற்றின் இருமருங்கும் ஆஞ்சநேயரும், கருடனும் சுதை வடிவில் மிகவும் மிடுக்காய் காட்சி தருகிறார்கள். பெருமாள் சன்னதிக்கு எதிரில் பரந்த வெளியில் கருட கம்பம் கம்பத்தடி அனுமாருடன் மிகவும் எடுப்பாகத் தெரியும். இந்த கம்பத்தடியில் எழுந்தருளியிருக்கும் அனுமார் மிகவும் வரப்பிரஸாதியாகப் பக்தர்கள் விரும்பி வேண்டிக்கொண்ட காரியத்தை உடனுக்குடன் முடித்துத் தருவார் என்ற நம்பிக்கை இக்கிராமத்து வாசிகள் எல்லோருக்கும் உண்டு. இவரைக் "கம்பத்து ஐயன்" என மிகவும் பயபக்தியுடன் அழைத்து வருகிறார்கள். இவருக்கு மாவிளக்கு சமர்ப்பித்துக் கூட்டமாக எல்லோரும் வழிபட்டு வருகிறார்கள். ஊரில் நடக்கும் வழக்குகளை இவர் முன் சத்தியமிட்டுத் தீர்த்துக்கொள்வார்கள். இந்த கருட கம்பத்திற்கு வடக்குப் பக்கத்தில் கோவில் மதிலை ஒட்டி நெற்களஞ்சியமும் அதனை அடுத்த மேல்பக்கத்தில் பெருமாள் வாகனம் கண்டருளும் கிருஷ்ணன் கோயில் என்ற வாகன மண்டபமும் (முன்பு இருந்த இடத்தில் கண்ணன் எழுந்தருளி இருந்தார்) வாகன மண்டபத்

தின் எதிரில் பெரிய தகரக் கொட்டகையும் உள்ளது. (இந்தக் கொட்டகையில் பல கல்யாணங்கள் நடந்து வருகின்றன) கருட கம்பத்தின் தென்பக்கத்தில் வரிசையாக தேவஸ்தான அலுவலகமும் அதனை அடுத்து மேற்கு பக்கத்தில் ஆழ்வார் ஆச்சாரியார்களின் சன்னிதியும் கோவிலுக்குள் பிள்ளை திருநறையூர் அரையர். உடையவர், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், பிள்ளை லோகாசாரியர், மணவாள மாமுனிகள் இவர்களின் மூர்த்தங்கள் உள்ளன.)

அதனை அடுத்து ஒரு பரந்த வெளியில் கோசாலையும் உள்ளன. பெருமாள் விசுவரூபத்திற்குப் பால் அமுதுபடி செய்யப் பசுக்களும் இந்த இடத்தில் வளர்க்கப்படுகின்றன. கோசாலைக்குப் பக்கத்தில் வாகன அறையும் இருக்கிறது. பெருமாள் சன்னதிக்குள் ராஜ கோபுர நுழை வாயிலில் மூன்று கண்கள் கொண்ட ராஜகோபுரமும் ராஜகோபுரத்தின் நுழை வாயிலுக்கு வெளிப் பக்கத்தில் தெற்குப் பக்கத்தில் திருப்பாவைப் பாசுரங்கள் பொறிக்கப்பட்ட கண் கவரும் சிலைக்கற்கள் வேய்ந்த சுவரும் தென்படும்:

இரண்டாவது பிரகாரம் (சுற்று)

ராஜகோபுர வாயிலில் நுழைந்து சென்றால் பெருமாளின் இரண்டாவது சுற்றுத் துவங்கும். இப்பிரகாரத்தின் தென் கிழக்கு மூலையில் மடைப் பள்ளி நாச்சியார் கோயில் கொண்ட திருமடைப் பள்ளி உள்ளது. பின்பு பெருமாள் சன்னதிக்குச் செல்லும் தெற்குப் பக்க வாயிலின் எதிரில் சுவருடன் ஒட்டிய பெரிய கண்ணாடி அறையும். நாலுகால் மண்டபமும் உ ள் ள ன. இம்மண்டபத்திலும் சில விசேஷ தினங்களில் பெருமாளுக்குத் திருவந்திக் காப்புக் கண்டருளப் பண்ணுவது உண்டு. தெற்குப் பிரகாரத்தின் நடுவே ஸ்ரீ வேதவல்லித் தாயார் சன்னதியுள்ளது. தாயார் சன்னதியில் அர்த்த மண்டபம், மஹாமண்டபம், வாத்திய மண்டபமும் உள்ளன. திருக்கண்கள் எல்லாம் கருணை வெள்ளம் அலை

பாயு மதாயும், திருமுகமெல்லாம் மந்தஹாச நிலவு வீசுவதாகவும், அருளே உருவெடுத்து அடியார்களின் துன்பத்தைப் போக்க, செம்பதுமத்தில் எழுந்தருளி இருப்பதுபோல் நாச்சியார் ஸ்ரீ வேதவல்லி என்ற திவ்ய நாமத்துடன் உற்சவ மூர்த்தத்திலும், மூல வடிவத்திலும் எழுந்தருளி அருள்பாலிக்கிருள். மண் வளமும், மாயோன் கருணை வளமும் மிகுந்து விளங்கும் இந்தத் தலத்தில் வேதக் கொடியே தளிர்த்துப் பூத்துப் பசுமையுடன் காண்கிறதோ எனப் பக்தர்களின் கண்களைப் பரவசமடையச் செய்யும் பிராட்டியை தரிசிக்க வேண்டும். வடமேற்கு மூலையில் ஸ்ரீ ஆண்டாள் சன்னதி அமைந்துள்ளது: ஆடிப்பூரத் திருவிழாவின் பொழுது பெருமாள் இங்குள்ள மண்டபத்தில் மண்டகப்படி கண்டருளுவார். வடக்குப் பிரகாரத்தில் ஸ்தல விருக்ஷமான வில்வ மரம் உள்ளது. பெருமாள் பாதுகா மண்டபமும், சொர்க்கவாசல் என்ற திருவாசலும் இங்கு உள்ளன. கிழக்குப் பிரகாரத்தில் யாகசாலை அறையும், உக்கிராண அறையும் அமைந்துள்ளன. பெருமாள் சன்னதிக்கு எதிரில் ராஜகோபுர வாயிலுக்கு எதிரில் ஸ்ரீ பாதுகா பலிபீடம் உள்ளது.

திருப்பொன் மண்டபம்

பெருமாள் சன்னதிக்கு எதிரில் தென்படும் அகன்ற அழகான கருட மண்டபத்திற்குத் திருப்பொன் மண்டபம் எனப் பெயர். இம்மண்டபத்தில் பெருமாள் திருவடியை சேவித்துக் கொண்டு கருடன் கூப்பிய திருக்கைகளுடன் எழுந்தருளி இருக்கிருர். கருடன் சன்னதிக்கு வலப்பக்கத்தில் வீர அனுமாரும் காட்சித் தருகிருர். இவர் மிக உக்கிரமான மூர்த்தியாம். முன்பு இவர் வாகனம் கண்டருளும் கிருஷ்ணன் கோயில் மண்டபத்தில் எழுந்தருளி இருந்தார். கருடன் சன்னதிக்கு வடக்கில் கண்ணுடி அறைக்கு நேர் எதிராக சேனை முதலியார் என்ற விஷ்வக்சேனர் எழுந்தருளியுள்ளார்.

மஹா மண்டபம்

இம் மஹா மண்டபத்தின் தென் பக்கச் சுவரை ஒட்டி நடுவில் சிலைப்பாறையாலான சரஸ்வதி பீடமும் உள்ளது. இப்பீடத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் சரஸ்வதி பூஜை அன்று பூஜை நடைபெறும். பக்கத்தில் கண்ணபிரான் எழுந்தருளியுள்ளார். சன்னிதிக்கு இருமருங்கிலும் சுதை, சிலைகளால் இரண்டு இரண்டு துவாரபாலகர்கள் எழுந்தருளி யுள்ளார்கள்.

அர்த்த மண்டபம்

அர்த்த மண்டபத்தில் சென்றவாறே பக்தர் களின் கண்களைப் பறிக்கும் பரத்தாமன் ஸ்ரீ வேத நாராயணன் திவ்ய சேவை தருவார். சுழலில் சிக்கிய துரும்பு போல் அடியார் மனம் அலைந்து அலைந்து அல்லல்பட்டு அலமறும் அடியார்களின் சிந்தனைக்கோர் சித்தரங்கமோ இது என்றவாறு கருணைக்கடல் அலைகொண்டு அமைதியாகத் தேங்கி இருக்கிறதோ எனலாம்படி அமலன் ஆதி பிரான் ஸ்ரீ வேதநாராயண வள்ளல் பள்ளி கொண்ட திருக்கோலத்தில் திவ்விய தரிசனம் தரு வார். தெற்கே திருமுடி சாற்றி, வடக்கே திருவடி நாட்டி, கிழக்கே கருணைக் கடைக்கண் காட்டி, "ஸ்ருஷ்டி சயனம்" என்ற திருக்கோலத்தில் அப் பொழுதைக்கப்பொழுது ஆராவமுதமாய் சேவை தருகிறான். திருவடிப் பக்கம் திருமகளும், பூமிப் பிராட்டியும் எழுந்தருளி இருக்கிறார்கள். நாபியின் மேல் பக்கம் சுவற்றில் நாலுமுகம் பிரமன் அமர்ந் துள்ளார். பெருமாள் திருவடிப் பக்கத்தில் ஸ்ரீ ஆதி சேஷனுக்குக் கீழே பிரகலாதன் அமர்ந்திருக்கிறார். மூலவர் தரிசனம் மிகவும் லட்சணமாக அமையும் மாளா மாயவினைகளைக் கண்டதும் விண்டோடச் செய்யும் திருவடிகளும், அந்தி வெய்யில் போன்ற அரைச் சிவந்த திருப்பரிவட்டமும் (ஆடையும் - பீதாம்பரம்) அயனைப் படைத்த எழில் உந்தியும்,

அடியார்களின் கண்களுக்கோர் கல்யாண பந்தல் போல் அமைந்த தேட்டரும் உதரபந்தமும் அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை மன்னிய திருமார்பும் மருங்கில் புரண்டு விளையாடும் ஸ்ரீவத்ஸ கௌஸ்துபங்களும், பரமபதபாரிஜவுக் கிளைகள் தரைப்பட்டு தரணியை வாழவைக்கிறதோ என்னும்படியான தடக்கைகளும், மகாலக்ஷ்மியின் இரு கண்களும் உலாவி வரும்படிக்கு அமைந்த இருதோள்களுடனும், வலம்புரிச் சங்கைப் பழிக்கும் திருக்கழுத்தும், செவ்வாயும், செங்கமலக்கண்களும், குந்தளம் குதித்து விளையாடும் நெற்றியும் மூவுலகிற்கும் முதல்வன் இவனே என்பதை எடுத்துக்காட்டும் மூரி விளங்கும் திருவபிஷேகமும் (கிரீடம்) சுடர்மிகு சுருதியின் சுவையுண்ட சுரன் தானே எனத் தெளிவிக்கும் வகையில் நான்கு வேதங்களையும் தலையணையாய்க் கொண்ட முடியும் பக்தர்களின் பக்திப் பசிக்கு பாயஸான்னமாக இருக்கும். பள்ளிகொண்ட பெருமாளுக்கு முன்பு

''மண்டலம் நிறைந்த திங்கள் வதனமும், கமலக்கண்ணும்
குண்டலம் சுடரும் காதும், குருநகைப் பவள வாயும்
தண்துழாய் அலங்கல் மார்பும் தடக்கை ஓர் நான்குமாகக்
கண்டனன் மறையும் காணுக்கரியவன் உருவம் அம்மா!''

என்றபடி உற்சவர் ஒய்யாரமாய் திவ்விய சேவை தருகிறார். ஒரு தடவை உள்ளம் உருக சேவித்து விட்டால் **''கண்டேன்! கண்டேன்! கண்ணிற்கு இனியது கண்டேன்''** என்று ஆர்ப்பரிக்கும்படியாக இருக்கும் உத்சவருக்குப் பக்கத்தில் திவ்விய மணி பீடத்தில் கர்மார்ச்சையும், செல்வரும் எழுந்தருளியுள்ளார்கள். கர்ப்ப கிரஹத்தில் தெற்கில் உத்சவ ஸ்ரீனிவாசனும், பழைய ஸ்ரீ வேதநாராயணனும் எழுந்தருளியுள்ளார்கள்.

''கருமுகில் தாமரைக்காடுபூப்துநீடு
இருசுடர் இருபுறத்து ஏத்தி ஏடவிழ்
திருவோடும் பொலிய ஓர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன் மேல்வந்து தோன்றினன்''

தீர்த்தங்கள்

இத்தலத்தில் (1) வேத தீர்த்தம் (2) குச தீர்த்தம் (2) அசுவத்த தீர்த்தம் (4) பதும தீர்த்தம் (5) திருப்பாற்கடல் (இது இப்பொழுது காணப் படவில்லை) என்ற தடாகத் தீர்த்தங்களும் தெற்குப் பக்கம் அகண்ட காவிரியும் ஆக ஆறு தீர்த்தங்கள் உள்ளன.

உத்சவங்கள் (திருவிழாக்கள்)

1 சித்திரை: 1. பெருமாள் காவிரிக்குச் சென்று சித்திரா பௌர்ணமி திருவிழா

2. கஜேந்திரமோக்ஷத் திருவிழா

2 வைகாசி: திருவோண நக்ஷத்திரத்தில் திருத் தேர் கண்டருளும்படிக்குப் பத்து நாட்கள் பிர்மோத்ஸவம் நடைபெறு கிறது. 10-ம் திருநாள் திருவெள்ள ரையில் நடப்பதுபோல் இளநீர் உத்சவம் நடக்கிறது.

8 ஆனி: 1. ஜேஷ்டாபிஷேகம். கேட்டை நக்ஷத்திரத்தில் மூலவருக்குத் தைலக்காப்பு.

4 ஆடி: 2. ஆடிப்பூர உத்சவம்

5 ஆவணி: ஸ்ரீ ஜயந்தி (உறியடி)

6 புரட்டாசி: நவராத்திரி உத்சவம் 10 நாட்கள்

7 ஐப்பசி: தீபாவளியன்று புதுத் திருப் பரிவட்டம் சாற்றுபடி உத்சவம்



ஸ்ரீ வேதநாயகித்தாயார்



8	கார்த்திகை :	திருக்கார்த்திகை (சொக்கப்பானை) உத்சவம்
9	மார்கழி :	அத்யயனோத்சவம் அதாவது திரு மொழி–திருவாய்மொழித் திருநாள் (பகல் பத்து-இராப்பத்து) 21 நாட்கள்) திருவாசல் திறப்பு.
10	தை :	சங்கிராந்தி—கனு உத்சவங்கள்
11	மாசி :	மகத்தில் பெருமாள் காவிரிக்கு எழுந்தருளுவது
12	பங்குனி :	பங்குனி உத்திர உத்சவம்

THIRUNARAYANAPURAM :

9 miles West of Musiri. Population 505. The place is known as Adirangam. The First Rangam of Vishnu. The figure of the God in the Vishnu Temple is in a recumbent position as in the Srirangam Temple and the place is thus held to be a miniature. Srirangam on the ling dwajastambha in front of the temple is a sculptured figure of Hanuman which is worshipped with the some what unurual offerings of sheep and goats.

(Trichinopoly Gazette.)

இந்த ஊர் மிக்க நிலவளம் பொருந்திய அழகிய சிறு கிராமமாகும். அகண்ட காவிரிப் பாசனத் திலுல் எங்கு நோக்கினும் வயல்களும், சோலைகளும் தென்படுகின்றன. அகண்ட காவிரியின் வடகரை யில் 4 வாய்க்கால்களுக்குப் பக்கத்தில் 363 ஏக்கரா நிலப் பரப்பைக் கொண்டது. இது தொட்டியம் பஞ்சாயத்து யூனியனுக்கு உள்பட்ட அரசலூர் பஞ் சாயத்தைச் சேர்ந்த ஊராகும். இது திருச்சிராப் பள்ளி மாவட்டம், முசிரி தாலூகாவில் தொட்டியம் என்ற பெரிய ஊருக்குத் தெற்கே அரசலூர் வழியாக 2½ மைல் தொலைவில் உள்ள ஊராகும். இவ்வூர்ப் பகுதியானது கல்வெட்டுக்களில் இராஜ இராஜவள நாடு என்றும், ஐகரை நாடு என்றும் அழைக்கப்பட் டுள்ளது. திருச்சியிலிருந்து சேலம் செல்லும் பஸ் பாதையில் தொட்டியத்திலிருந்து மாட்டு வண்டியில் செல்லலாம். அல்லது தொட்டியத்திலிருந்து காட் டுப்புத்தூர் செல்லும் ரோட்டுப் பாதையில் அரசலூ ரிலிருந்து தெற்கே ஒரு மைல் சென்று ஊரை அடை யலாம். தற்சமயம் திருச்சியில் இருந்து மூன்று முறை இவ்வூருக்கு பஸ் வந்து செல்கிறது. திருச்சி—ஈரோடு ரயில் மார்க்கத்தில் லாலாபேட்டை ரயில் நிலையத்தி லிருந்தும் காவிரியைத் தாண்டி வரதராஜபுரத்தின் வழியாக மேற்கே அரை மைல் வந்து இந்த ஊரை அடையலாம். ஆக இந்தத் திருநாராயணபுரம் முசிரி யிலிருந்து 9 மைல் மேற்கிலும், தொட்டியத்திலிருந்து 2 மைல் தென் மேற்கிலும் அமைந்துள்ளது. இது ஒரு இனும் கிராமமாகும். கோவில் தர்மகர்த்தாக்களின் அனுமதியின் பேரில் அமைக்கப்பட்ட கிராம முனிசீப் ஒருவர் இருக்கிறுர். இந்த ஊரில் 300க்கு மேற்பட்ட குடிகள் இருக்கின்றன. இதற்கு வேதபுரி எனவும் பெயர் உண்டு.

தியான சுலோகங்கள்

(கருடன் பெருமாளைப் பிரதிஷ்டை செய்த தினத்தின் சுலோகம்)
ஏட்டுச்சுவடியில் உள்ளது.

உத்சவங்களின் முடிவு நாளன்று அனுசந்திக்கப்படுவது,

"விபவாப்தே மினசைத்ரே. ஸோமபே ஸௌமயவாஸரே
ஸப்தம்யாம் பிரதமேபக்ஷே. ஸங்கமே காலஸப்தமே
க்ஷிரார்ணவஸரோமத்யே கூர்மபீடேககாதிப :
விமானம் ஸ்தாபயாமாஸ ஸ்ரீ வேதநாராயணஸ்ஸகி ॥"

தலப் பெருமையை விளக்கும் செய்யுள்கள்

(இது தேவஸ்தானத்தார் கொடுத்த குறிப்பு)

"காவேர்யாம் உத்தரேதீரே. வேதநாராயணஸ்தலே |
ஸ்தா ஸிந்து முகேபூத்வா பிரஹ்லாத பரிபூஜித :॥
வர்ததே ஸந்நிதானேனஸர்வேஷாம்போக மோக்ஷயோ: |
ஸ்ரீ வேதநாராயண: ஸ்ரீமான் க்ஷீரார்பை நிகேதன:॥
ஸ்ரீமதே பிர்மகுரவே வேதமந்திரசாயினே |
நமோ பகவதே தேவ வேதநாராயணாயதே ॥
வேதஸேவ்யோ வேதராசி : வேதப்பிரமகுருர் நம : |
வேதநாயக வேதாங்கோ வேதநாராயணப்ரபு :॥

ஸ்ரீ வேதநாயகி சமேத ஸ்ரீ வேதநாராயண பரப்ரம்மணே நம :

வருமானமும் சொத்துக்களும்

இந்த கிராமமே கோவிலின் ஏகபோக கிராமம் என்று கூறலாம். இங்குள்ள குடியானவர்கள் யாவரும் கோயில் நிலங்களில் பணி செய்து வாழ்க்கை நடத்துகிருர்கள். இக்கோயிலுக்கு ஆண்டு தோறும் தேவஸ்தானத்தாரின் முயற்சியால் காவிரிப் படுகைக்குப் பக்கமுள்ள தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்களில் தென்னம்பிள்ளேகள் வைத்து வளர்க்கப்பட்டு ஆண்டு வருமானம் பெருகி வருகிறது; மற்றும் நஞ்சை சுமார் ஆண்டு வருமானம் ரூ. 2 லட்சம் வரை கிடைக்கப் பெறுகிறது.

நிலங்களின் விபரம்:— இந்தக் கிராமத்தின் விஸ்திரணம் 363 ஏக்கர். இதில் 148 ஏக்கர் படுகையும் காவிரியாக உள்ளன.

சிற்பச் சிறப்பு

திருப்பணிகள் நாய்க்கர் காலத்தில் செய்யப்பட்டவை சில உள்ளன. கருங்கற் கொடுங்கைகள் மிகுந்த வேலைப்பாடுகள் உள்ளன. சுற்றுச் சுவர்களில் அனுமார், யோக நரசிம்மன் முதலிய சிற்பங்கள் உள்ளன.

இன்றைய ஊர்

இந்த ஊரைப் பற்றிய குறிப்பு ஆங்கிலத்தில் திருச்சி மாவட்ட கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டதன் நகல் கீழே தரப்பட்டுள்ளது.

இந்த ஊருக்குச் சுற்றுப்புறத்தில் அரசலூர், வரதராஜபுரம், காரைக்காடு, கனகாம்பாள்சமுத்திரம் என்ற கிராமங்களும் உள்ளன. ஸ்ரீ தாயுமான சுவாமி கோயில் என்று பெயர் கொண்ட சிவாலயமும், நவநீத கிருஷ்ணன் சன்னிதியும் உள்ளன. இது ஒரு புராணப் பிரசித்தி பெற்ற தலம். அத்துடன் ஸ்ரீ இராமானுசன் திருவடி சம்பந்தம்பெற்ற பிள்ளை திருநறையூர் அரையர் என்பவர் தீப்பிடித்தபொழுது குடும்பத்துடன் பெருமாளை அணைத்துக்கொண்டு மூல பிம்பத்திற்குப் பழுது ஏற்படாமல் காப்பாற்றி குடும்பத்துடனே பிராணத்தியாகம் செய்தார் என்ற காரணத்தினாலும் பல ஸ்ரீ வைணவப் பெரியோர்கள் இத் தலத்திற்கு எழுந்தருளி காஷாயம் பெற்றார்கள் என்ற காரணத்தினாலும், உடையவர் இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளிப் பின் மைசூர், மேலக்கோட்டை, திருநாராயணபுரம் சென்றார் என்ற வாய்மொழி வழக்காலும் இது ஒரு ஸ்ரீ வைணவ ஆச்சாரியர்கள் ஆதரித்த தலமாகவும் போற்றப்படுகிறது. ஸ்ரீ இராமானுசன் இத்தலத்திற்கு எழுந்தருளித்தான் வெள்ளைச் சாற்றுபடி (காவி ஆடையைக் களைந்து வெள்ளை ஆடை தரித்தல்) கண்டருளினார் என்ற தலத்தார் கருத்து. குரு பரம்பரைக்கதையில்

காணாத நிகழ்ச்சியாகத் தெரிய வருகிறது. ஆயினும் இந்தக் கருத்து தலத்துப் பெரியோர்கள் குடும்பங்களில் ஓரான் ஒரு வழியாகச் சொல்லப்பட்டு வருவதால் இதன் உண்மை நிலையைப் பெரியோர்களை விசாரித்து உறுதிப்படுத்த வேண்டியதாய் இருக்கிறது. தற்சமயம் தேவஸ்தானத்து அறங்காவலர்கள், இறை பணியாளர் இவர்கள் எல்லாம் மிகவும் கண்ணும் கருத்துமாய் நிர்வாகத்தில் அக்கறை கொண்டு தேவஸ்தானத்தைச் சேர்ந்த தரிசு நிலங்களில் விளைச்சலை உண்டுபண்ணி கோயில் வருமானத்தை அதிகப்படுத்த பாடுபட்டு வருகிறார்கள். இப்பொழுது ஆண்டுக்கு இரண்டு லக்ஷம் ரூபாய் வருமானம் வரும் வகை ஏற்பட்டுவிட்டது.

நிருவாகம்

இத்தலத்தின் நிருவாகம் 1944க்கு முன் லால்குடி தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையில் இருந்தது. 1944 ஆண்டில் இருந்து சென்னை அறநிலையப் பாதுகாப்பின் (Hindu Religious and Charitable Endowment Board) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது.

புராண வரலாறுகள்

பிரகலாதன் வரலாறு


(பிர்மாண்ட புராணத்தில் பிர்மா நாரதருக்கு உபதேசித்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தாரால் பிரதி செய்யப்பட்டுள்ளது. (R. No. 1554) பின்வருமாறு)

திருச்சிராப்பள்ளி சுபா. வகையரு விட்டுக்கட்டி தாலூகா தொட்டியம் மாகாணத்தைச் சேர்ந்த திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் கோவில் பிரம்மாண்ட புராணத்துக்கு நகல்—பிரம்மாண்ட புராணத்தில் பிரம்மா நாரதருக்கு உத்தரம்:

“ காவேரி வடகரை வேதநாராயண சுவாமி எழுந்தருளியிருக்கிறுர். அவர் சன்னிதானத்தில் வேதம் ஆறு சாஸ்திரம் சகல ஆகம புராணங்கள் சகலமும் அதிகரிச்சு போய் துவாத சாக்ஷர நிஷ்டருய்ப் பூசை பண்ணி சகல பீஷ்ட.........பிரம்மாவைப் பார்த்துச் சொன்ன பிரகாரம் ஸ்ரீ வேதநாராயணசுவாமி என்ற... ... மாக எனக்குச் சொல்லவேணும் என்று கேட்கிற போது பிரம்மா...... கோவில் வாசலிலே இருக்கிற சுய விசயர்கள் சாப காரணத்தினுலே அசுர......... பிரகலாதர் என்று ஒரு பிள்ளை பிறந்தான்.

அவன் பாலியத்திலே அதிபக்தனுய் இருக்கிற போது .... வதம் பண்ணவேணும் என்று சருவப்பிரயத்தினமும் பண்ணினுன். இவருடைய..... பக்தியும் இல்லாமல் இருந்தது. அப்போது அரியானவர் மகா கோபத்துடனே கம்பத்......... பண்ணுகிறபோது பிரம்மா முதலான சகல தேவதைகளும் வந்து சந்தோஷத்தோடே.. ... தேவேந்திரன் கிட்டப் போகச் சொல்லிச் சொல்லுகிற போது பிரகலாதன் .... உனக்கு வேண்டிய வரனைக் கேட்டுக் கொள்ள...... இராஜ்யமும் இந்த இரண்டைத் தவிர..... ...வரை ஒன்றுந் தேவை இல்லை .....காவேரிக்கு வடகரையிலே காசிக்கு ஆபத் தீ சுரனுடைய கரையிலே........ அங்கே நாம் வந்து உன்னுடைய மனோ பீஷ்டத்தைக் கொடுக்கிறோம் என சிறிது நாள் ராஜ்ஜியபாரம் பண்ணிப் பின்பு வேதநாராயண க்ஷேத்திரத்தில் தபசு பண்ணுகிறதுக்கு யத்தனம் பண்ணுகிறபோது சுக்கிரீவரும், அனுமாரும் அவ்விடத்திலே வந்து பிரகலாதரைக் கண்டு சமாசாரம் கேட்கிறபோது பிரகலாதர் ஸ்ரீ வேதநாராயண சுவாமி இங்கே வரும்படியாகத் தபசு பண்ண வேணும் என்று சொன்னுர். சுக்ரீவர் உம்முடைய தவசுக்கு விக்கினம் வராமல் இராட்சதர்களைத் தடுத்து தபசு நிறைவேறப் பண்ணுகிறேன் என்று சொன்னுர். பிரகலாதா கிரிஷ்ம காலத்திலே வெய்யிலிலே இருந்து ஏமந்த காலத்திலே செபத்திலே இருந்து..................கொண்டு மிக உக்கிரமாய்த் தபசு பண்ணுகிற வேளையிலே

இந்திரன் முதலாயிருக்கிற தேவதைகள் எல்லாம் கூடி மன்மத வசந்தர்கள் அப்சரஸுக்களோடே தபசை விக்கினம் பண்ணச் சொல்லி யனுப்புவிச்சார்கள்! அவர்கள் வந்த விடத்திலே சுக்ரீவ ......தம்முடைய மது வனத்திலே யிருந்து கொல்லி மலைக்காய் கிழங்கு, புஷ்பம், மதுரங்கள் எல்லாம் கொண்டு வந்து கொடுத்துப் பிரகலாதரை யதிதி பூசை பண்ணச் சொல்லி.......... ......பிரகலாதனும் அவர்களுக்குப் பூசை பண்ணினுர்! .... அவர்கள் பிரகலாதனுடைய பூசையினுலே மிகவும் சந்தோஷப்பட்டு உமக்குத் தபசு சித்தியாகிறது என்று சொல்லிப் போட்டுத் தேவலோகத்திலே போய்த் தேவேந்திரனேடே சொன்னுர்கள்! தேவேந்திரனும் இதைக் கேட்டு வெகு (விய) சனத் தோடே தேவதைகள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு பிரம்மலோகத்திலே போய்ப் பிரம்மாவோடே சொல்லுகிறபோது பிரம்மாவும் பிரகலாதனுடைய மனேபீஷ்டத்தை நம்மாலே கெடுக்கக்கூடாது என்றுச் சொல்லிச் சகல தேவதைகளையும் கூட்டிக் கொண்டு சத்திய லோகத்திலேயிருந்து க்ஷீர சமுத்திரத்திலே கரையிலே போய்ச் சுவாமியைத் தோத்திரம் பண்ணினுர். அப்போது சுவாமி பிரத்தியக்ஷமாய் வந்து பிரம்மா எதிரே நிற்கிறபோது பிரம்மாவும் பிரதக்ஷிண நமஸ்க்காராதிகளைப் பண்ணித் தோத்திரம் பண்ணுகிறபோது சுவாமி நீங்கள் வந்த காரியம் எனக்குத் தெரிஞ்சுது! பிரக லாதர் தபசு பண்ணுகிருர்! அது நிமித்தமாய் நான் பிரகலாதனுக்குப் பிரத்தியக்ஷமாக அர்ச்சாவதாரம் பண்ணிக் காவேரிக்கு உத்தரதீரவாசிகளாய் இருக்கிற செனங்களாலே சேவியமானருய்க் கொண்டு வாசம் பண்ணுகிறேம் என்று சொல்லிப் பிரம்மா முதலான தேவைகளை யனுப்பிவிக்கப்போட்டு அந்தர்த்தானம் பண்ணினுர்! பின்பு சிறிது நாளைக்குமேல் கெருடரானவர் திவ்விய விமானத்தோடேகூடச் சுவாமியை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு புறப்படு கிற சமயத்திலே ஆதிசேஷன் கொடைபிடிக்க பிரம்மா முதலான சகல தேவதைகளும் பண்ணக்



கெந்தருவரானவர் விருகானகம் பண்ண அனேக வைபோகத்தோடே கூடச் சுவாமியை யெழுந் தருளப்பண்ணிக் கொண்டு வந்து திருக்காவேரிக்கு உத்தரதீரத்திலே சீரார் தவசிரசுடைய மத்தியத்திலே கூர்ம பீடத்திலே எழுந்தருளப்பண்ணினர். பிரகலாதரும் சுக்கிரீவ சுவாமியைக் கண்டு சந்தோஷச் (அரி)ருதாரை கொண்டு பிரதக்ஷிண நமஸ்காரங்களைப் பண்ணித் தோத்திரம் பண்ணும் இடத்தில் ஸ்ரீ வேதநாராயண சுவாமி பிரத்தியட்ச மாய்ப் பிரகலாதரைப் பார்த்துச் சொன்ன பிரகாரம் நீ பண்ணின தபசினலே சந்தோஷ மாச்சுது உனக்கு சர்வாபீஷ்டத்தையும் கொடுக்கிறேன் என்று சொல்லி பிரதோஷ சபம் (ரதோற்சவம்) பண்ணு விக்கச் சொல்லி ஆக்ஞாபித்தார். பிரகலாதர் பாஞ்ச ராத்ர பிரகாரமாக இரதோற்சவம் பண்ணிவிச்சு காவேரியினுடைய உத்தர தீரவாசிகளாய் இருக்கிற செனங்களோடே கூடச் சகல வைபோகமும் நடப்பி விச்சுக் கொண்டு சுகமாக வாசம் பண்ணிக்கொண்டு இருந்தார். சுவாமி எழுந்தருளியிருக்கிற பிரகாரம் ....அனந்த போக பரியங்கத்திலே சயனிச்சுக் கொண்டு வேதப் புஸ்தகங்களை தலையணை வைத்துக் கொண்டு பாத மூலத்திலே ஸ்ரீ பூமிகளையும் நாபீ கமலத்திலே பிரம்மாவும் இந்தப் பிரகாரமாய் அருச்சா வதாரமாய் எழுந்தருளி இருக்கிருர்.

ஸ்ரீ வேதநாராயணசுவாமி சகாயம்.

(இவ்வரலாற்றுப் பிரதியில் "......" இந்தக் குறியுள்ள இடங்களில் சொற்கள் விடப்பட்டுள்ளன.)

திருநறையூர் அரையர் (மோக்ஷம் பெற்ற) வரலாறு

இவர் இராமாநுசன் சிஷ்யர்கள் 164 பேர்களுக்குள் அரையர் 14 பேருக்குள் ஆருவதாக எண்ணப்பட்டவர்.

முன் ஒரு காலத்தில் பிள்ளை திருநறையூர் அரையர் என்னும் ஸ்ரீ இராமானுசனுடைய திருவடி சம்பந்தம் பெற்ற மகான் தம் குடும்பத்துடன் மைசூர் மேலக்

கோட்டை திருநாராயணபுரம் செல்லப் பிள்ளையை மங்களாசாஸனம் (தரிசனம் செய்ய) செய்யக்கருதி திருவரங்கம் முதலிய திவ்வியத் தலங்களை சேவித்துக் கொண்டு திருநாராயணபுரம் எழுந்தருளினார். இங்கேயே காவிரியின் நீரையும் ஸ்ரீ வேதநாராயணன் திவ்விய தரிசனத்தையும் மிகவும் உகந்து சில நாள் இந்த தலத்தில் தங்கி விட்டார். அக்காலத்தில் கோயில் பனைமட்டைகளால் வேயப்பட்டிருந்தது. ஒரு நாள் அரையர் பெருமாளை சேவிக்க வந்தபொழுது கொடிய சிலர் கோயிலுக்கு தீயிட்டனர். இதைக் கண்ணுற்ற மகாபாகவதராகிய அரையர், பெருமாள் திருமேனிக்கு ஏதாவது அவத்யம் (தீங்கு) ஏற்பட்டு விடுமோ என அஞ்சி மனம் உருகி, தாமும் குழந்தைகள் அறுவருமாகப் பெருமாள் திருமேனியில் அடுக்காகத் திரை இட்டுக் கொண்டார்கள். குழந்தைகளும் "அனற் சூடு படுகிறதே" என்றார்கள். "சற்றுப் பொறுங்கள் நாம் யாவரும் குளிர்ந்து விடுவோம்" எனப் பதில் கூறினார். தீயும் அணைந்தது. பெருமாள் திருமேனிக்கு ஒரு விதமான தீங்கும் ஏற்படவில்லை. பரம பாகவதரான அரையருக்குப் பெருமாள் சேவை தந்து குடும்பத்துடன் மோக்ஷம் தந்தருளினார்.

"ஸ்ரீவசனபூசணத்தில்" பிள்ளை திருநறையூர் அரையர் திருவரங்கத்திற்கு முக்காதத்திற்கு திருமேனியை உபேக்ஷித்தாற் போல" என்ற ஸ்ரீ சூக்தி இடப்பட்டுள்ளது. — அரையர் திருநக்ஷத்திரம்: கேட்டை.

குறிப்பு: ஸ்ரீ பிள்ளை லோகார்யர் என்ற ஆசாரிய ரத்தினம் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீவசநபூஷணம் ஸ்ரீசூக்தியும் அதற்கு உரையிட்டருளிய ஸ்ரீமணவாள மாமுனிகளின் திவ்ய உரையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முதல் ப்ரகணம்—84 சூர்ணிகை:

"பெரியவுடையாரும் (ஜடாயுவும்) பிள்ளை திருநறையூரரையரும் உடம்பை உபபேக்ஷித்தார்கள் சிந்தயந்திக்கு உடம்பு தன்னடையே போய்த்து"

உரை:—"பிள்ளை திருநறையூர் அரையர் குடும்பமாக திருநாராயணபுரத்தில் வேதநாராயணப் பெருமாளை

சேவிக்கச் சென்று புகுந்த அளவிலே பரஸமியிகள் அந்தக்கோயிலிலே அக்னிப்ரக்ஷேபத்தைப் பண்ண உள்ளுநின்றவர்கள் எல்லோரும் புறப்பட்டோடிப் போகச் செய்தே, அந்த எம்பெருமான் திருமேனிக் கழிவு வருகிறபடியைக் கண்டு சகிக்கமாட்டாத ப்ரேமாதி சயத்தாலே தாமுமொக்க முடிவதாக வத்த்ய வஸித்து இவர் நிற்கையாலே பிள்ளைகளும் இவரை விட்டுப் போகோமென்று நிற்க, அவர்களும் தாமும் கூட வதுக்குள்ளே நின்று திருமேனியை விட்டாரென்று ப்ரஸித்தமிஹே"

ஸ்ரீ ஜகந்யாசாரியர் உரை:— "தம்மை யழியு மாறும் பெரியவுடையாரும், அச்சேர்த் திநித்யமாக வேணும் என்று மங்களாசாஸனம் பண்ணும் பிள்ளை திருநறையூர் அரையரும் ப்ரேமபராவச்யத்தாலே கைங் கர்யோபகரணமான திருமேனியை அழிவுக்கிட்ட சரக்காக்கி உபேக்ஷித்தார்கள்" (சென்னை ஆந்நத முத்ராலயப் பதிப்பு 90; 91 பக்கங்கள்)

கல்வெட்டுகள்

Madras Government Oriental Series (Book) No. CXXI

"தென்னிந்திய கோயிற் சாஸனங்கள் பாகம் 2" என்ற அரசாங்க வெளியீட்டுப் புத்தகத்தில் (1954) பக்கம் 753 முதல் 763 முடிய 11 பக்கத்தில் உள்ள பகுதியில் சாஸனம் 799, 800, 801 என்ற இலக்கம் கொண்ட மூன்று சாஸனங்களில் குறிப்பிட்டுள்ள சிலா சாஸனப் பகுதிகள் உள்ளன.

முதல் சாஸனம்

மதுரை நாயக்க சக்கிரவர்த்தியான விஜயரங்க கிருஷ்ண முட்டு வீரப்ப சொக்கநாத நாயக்கருடையது. இவன் நாயக்க மன்னர் வரிசையில் 14வதாக வருகிறுன்.

இரண்டாவது சாஸனம்

அவனிவேந்தராமன் என்ற திருபுவன சக்கிர வர்த்தி கோனேரின்மை கொண்டான் என்ற மன்ன னுடையது.

மூன்ருவது சாஸனம்

இதுவும் அவனிவேந்தராமன் கோனேரின்மை கொண்டான் என்ற மன்னனுடையது.

சாஸனம் உள்ள இடமும் காலமும்

முதல் சாஸனம்

கோயில் பனை ஓலை கோசத்தில் உள்ளது. தேதி: சக ஆண்டு 1619 கலி 4797 பஹுதான்ய-வரு தை-மீ அமாவாஸ்யை, வெள்ளிக்கிழமை, சிரவண நக்ஷத்தில் சாஸனம் அளிக்கப்பட்டது.

இரண்டாவது சாஸனம்

விமானத்திற்குக் கீழ்ப்புறம் அர்த்த மண்டபத் திற்குத் தென்புறம் கல்வெட்டில் எழுதி இருப்பது. கோனேரின்மை கொண்டான் அரசாட்சியில் மூன்ருவது ஆண்டு 302ம் நாள் சாஸம் இடப்பட்டது.

மூன்ருவது சாஸனம்

இது தாமிரபட்டயத்தில் உள்ளது. கோனேரின்மை கொண்டான் அரசாட்சியில் 3வது ஆண்டு சாஸனம் ஏற்படுத்தப்பட்டது.

4. இதைத் தவிர கொழுத்தில் மற்ருேர் கல் வெட்டுச் சாஸனமும் உள்ளது. இக்கோயிலின் பழமை யும், முற்கால மன்னர்களின் தருமங்களையும் அறிவிப்ப தற்குப் பல கல்வெட்டு சாஸனங்களும், பனை ஓலை, தாமிரப் பட்டய சாஸனங்களும் உள்ளன. இவை சர்க்காரால் பிரதிகள் செய்யப்பட்டு ஒரு தனிப் புத்தக மாக வெளியிடப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுக்களில்

இந்த ஊரைப் பற்றிய பல செய்திகள் அறியக் கிடக்கின்றன. முற்காலத்தில் திருநாராயணபுரம் தேவஸ்தானம், திருச்சிராப்பள்ளி கஸ்பா வகையரா விட்டுக்கட்டித் தாலூகா, தொட்டியம் மாகாணத்தைச் சேர்ந்த தென்றும் இவ்வூர்ப் பகுதி இராஜ-ராஜவளநாடு ஐகரை நாடு என்று வழங்கப்பட்டதென்றும் பெருமாளுக்குத் திருநாராயணபுரத்து நாயனுர் என்ற பெயர் வழங்கி வந்ததென்றும் கோயில் காரியங்களுக்கும், நந்தவன கைங்கரியத்திற்கும் வரி இல்லாமல் பூதானங்கள் செய்யப்பட்டு வந்ததென்றும் அக்காலத்தில் ஏர் வரி, இன வரி, இடையர் வரி, மனை வரி, ஆள் வரி முதலிய வரிகள் இருந்தன என்றும் வேறு பல செய்திகளும் தெரிய வருகின்றன.

கல்வெட்டுச் செய்திகள் வருமாறு

1. R. No. 1553 திருச்சிறைப்பள்ளி கசுபா வகையரா விட்டுக்கட்டித் தாலூகா தொட்டியம் மாகாணத்தைச் சேர்ந்த திருநாராயணபுரம் தேவஸ்தானம் ஏட்டுச் சாஸன நகல் திருநாராயணபுரம் வேத நாராயணப் பெருமாளுக்கு திருச்சியை ஆட்சி செய்த ஸ்ரீ விசயரெங்க முத்துவீர சொக்கநாத நாயக்கர் பூமி தானம் செய்தது. இதில் மன்னன் பின்வருமாறு புகழப்படுகிருன். "முன்மொழி, விநோதன், முத்தமிழன், அழுகுக்கு அனங்கன், சொல்லுக்கு அரிச்சரிந்திரன், வில்லுக்கு விசயன், பெலத்துக்கு வீமன், அர்த்தத்துக்கு தனதன், மதத்துக்கு மன்னியன், பரிக்கு நகுலன், கடகரி ஒகையன், கொடைக்கு கர்ணன், வாழ்வுக்கு குபேரன், பொறுமைக்குத் தருமன், ஒளிக்குக் கதிரவன், அழகுக்குச் சந்திரன், வீரத்தில் விக்கிரமாதித்தன், அன்னதானத்துக்கு அன்ன சத்திர சோமன், தன்ருரதரான், பரதார ஸகோதரன், தனலட்சுமி, தானிய லட்சுமி, சந்தானலட்சுமி, சௌபாக்கியலட்சுமி, வீரலட்சுமி, விசயலட்சுமி, வரலட்சுமி, மகாலட்சுமி, துரந்தரன் இப்படி எனப்பட்ட புகழ்வதுண்டு.

இதில் காணப்படும் தருமங்கள் பின் வருமாறு

அல்லவை கழிந்து, நல்லவை நாடி, கோன்மெலியச் சூடி, தன்னையும் ஆறில் ஒன்று கடமை கொண்டு அருள் பெருக. அளம் புறந்த (அறம் புரிந்த) ஆகமசாலையும், அந்தணர் வேள்வியும், வேத ஒலியும், விழவொழி வீதியும், தபோதனர் மடங்களும். தர்மச் சாலையும், தண்ணீர்ப் பந்தலும். தாபறஷ்த்தமும் இப்படிக் கொத்த தர்மங்களுக்கும் உள்ளாய் நடந்து.

இச்சாஸனத்து முடிவுப் பகுதி

ஸ்ரீ வேதநாயகி சமேத ஸ்ரீ வேதநாராயண சுவாமியார் திருவிளையாட்டத்துக்கு பூதான தர்மம் சாசனப்பட்டயம் பண்ணிக் கொடுத்தோம். இந்த தர்ம சாஸனத்தை யாதாமொருவன் விகாதம் பண்ணினவன் மாதா பிதாவையும், கங்கைக் கரையிலே காராம் பசுவையுங் கொன்ற தோஷத்தை அனுபவிக்கக் கடவனாகவும்.

2. (R. No. 1555 கோயில் அர்த்த மண்டபத் துக்குத் தென் புறத்தில் உள்ளது. நெமிலி உடையான் பூமி தானம் செய்ததைப் பற்றியது. அதன் விபரம் வருமாறு)

"ஸ்ஸ்வதி ஸ்ரீ திருச்சிராப்பள்ளி கசுபா வகையரு விட்டுக்கட்டித் தாலூகா தொட்டியம் மாகாணத்தைச் சேர்ந்த திருநாராயணபுரம் தேவஸ்தானத்தில் விமானத் துக்குக் கிழ்புறம் அர்த்த மண்டபத்துக்குத் தென்புறம் சிலாசாதனத்திலே எழுதி இருக்கப்பட்டது. இருபத்து மூன்று அடி நீளத்துக்கு நால்வரியில் எழுதி இருக்கப் பட்டது.

திரிபுவன சக்கிரவர்த்தி கோன் நேரின்மை கொண்டான் வடகரை இராச ராச வளநாட்டு அய்கரை இராசராச நாராயணன்—திருநாராணபுரத்து நாயனர்—வே த நா ரா ய ண ப் பெருமாள் திருச்

சுற்றிலும் மலேக்கூற்றத்துத் தச்சனேன் நெமலி உடையான் உய்யக்கொண்ட பிள்ளேயான வாணுதராயர் வைத்த அகரம் வாணுதராயச் சதுர்வேதி மங்கலத்துப் பட்டர்களுக்குச் சோழவள நாட்டில் நட்டுப் பற்றலியர்... தேவியும் இவ்வூரால் வரும் நஞ்சை, புஞ்சை, நத்தமும், நத்தப்பாடும் குன்றமும், குன்றப் பரப்பும், நீர் நிலேயும், நீர் நிலேக் குடிப் பரப்பும், நத்தங்களும் அங்ஙனமுள்ளிட்ட படுகையும் உதகாதி பூர்வ, பூதான இறையிலியாகத் தந்தோம். இத்தால் வரும் நெல் கடமை, காசுக் கடமை, நத்தம் மராமத்து விநியோகமாகத் தந்த கைப்பசை, மேஷ்டி பாட்டம், பஞ்சுமாலி, சாத்துவிக பாகம், ஆனேச் சாலேக்கு வைத்த எண்ணெய்ப் பந்தம் இலாகு சினேபெறுமதின் தேவைத்தறிகின்ற – செக்கிரை கட – ஓடாலி தட்டார பாட்டம் ஏர் வரி – இன வரி – இடையர் வரி – மனே வரி- ஆள் வரி. ஆத்தங்கரை தேவை உள்ளிட்ட பல உபாதிகளும் தவிர்த்து செந்நெல் செங்கழுநீர், கரும்பு, மா, பலா, இஞ்சி, மஞ்சள், தெங்கு, கமுகு கொடி உள்ளிட்ட தான வேண்டின பயிர் செய்து கொள்வதாகவும் சொல்லி நம்வரியிவ்வாறு கல்லிலிம் வெட்டிக் கொள்க. இவை தச்சநெமலி உடையான் கையெழுத்து இவை வாணுத்திரி ராயன் கை எழுத்து.

3. R. No. 1557 தாம்பிர ஏட்டுச் சாசனம் (5 plates) மகாபலிவாணராயன் என்னும் அரசன் சதுர்வேதிமகங்லம் பட்டர்களுக்கும், ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் கோயிலுக்கும் மானியமாக விட்ட மனேப் பங்கு-பூமிதானம் முதலிய செய்திகளேக் கூறுகிறது. இதில் சுமார் 70 பேர்களுக்கு மேலான பட்டர்களின் பெயர்கள் கூறப்படுகின்றன.

4. R. No. 128—1909. கோயமுத்தூர் ஜில்லா உடுமலேப்பேட்டை தாலுகா கொழுமம் குமாலிங்கத்தில் உள்ள கரிவரதராஜப் பெருமாள் கோயிலின் தென்புறத்தில் ராஜகேசரி கோனேரி மேக்கொண்டான் (கோ + நேர் + இன்மை கொண்டான்) வீர ராஜேந்திர தேவ சோழன் காலத்தில் (கி. பி. 1207 C 1236)

திருநாராயணபுரம் எம்பெருமாள்; வேதநாராயணபுரம் எம்பெருமாள் வேதநாயகப் பெருமாளின் நந்தவன கைங்கரியத்துக்காக நிலம் தானம் செய்யப் பெற்ற குறிப்பு (வீர ராஜேந்திர சோழன் குலோத்துங்க சோழனுடைய குமாரனாகக் கருதப்படுகிறான்).

துதிப்பாடல்

(ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் "திருப்பணிமாலை" முற்காலத் திருப்பணிகளைப் பற்றிய நூல், தெலுங்கு உரை யுடன் உள்ளது. R. No. 1510 எண் உள்ள அரசாங்கப் பிரதி)

(திருச்சிராப்பள்ளி கஸ்பா, விட்டுக்கட்டி தாலூகா, திருநாராயணபுரம் தேவஸ்தானம் திருப்பணிமாலை)

1. ஆதியிலே திருபுவன சக்கிர வர்த்தி
ஆனந்த மனிமாடக் கோயில் செய்தான்
வேதியர்கள் முனிவர்கள் திருப்
பிரதிட்டை விதவித மணி பண்ணி
வீதியணியணியேய் வாழ
மாதுளங்கவின மணி வாணி சொல்லும்
நீதிகெஜ சக்கிரவர்த்தி ராயன் நீள்நிலத்தில்
நியாயமாய் வாழியாமே.

2. சோதிமதி வந்து தவிழ்சோலைசூழுஞ்
சோபனஞ்சேர் ஊரில் வாழுங்
கோதிலாராமாழ்வார்கள் பிரபந்தப்பாடற்கூறு
கலைப்பொட்டக விமானத்துள்ளே
சாதிமணி மாணிக்க மதிவிளைந்த
சதுரமாய்க் கோபுரத் திருப்பணிகள் செய்தாள்
நீதிபுகழ் திருபுவன சக்கரவர்த்தி
ராயன் நீள்நிலத்தில் நிற்க மிகவுந்தானே.

3. பிருது சக்கிரவர்த்திக்குச் சேவையடி சாதித்த
பெருமாள் நாரண பண்டாரி குலதிலக
பானுமண்டலமேவு பங்கேரு காட்ச நிதியன்
பதி சக்கிரவர்த்தி வாழ் பார்த்திவர் பணிந்தேத்தும்

பரமணி நாராயணன் பைந்துளப மாலையணி
அலங்காரபுஜ பராக்கிரமன் சக்கிராயுதன்
விதிசக்கிரவர்த்தி புகழ் சிபி சக்கிரவர்த்திக்கு
வெகுமானமான பெருமாள் நிதிச்சக்கிரவர்த்திபுணர்
மதுசக்கிரவர்த்திவளர் நரசக்கிரவர்த்தி தொழவே
நரசக்கிரவர்த்திமகிழ் வேதநாராயணர் நாமம்
ஆயிரம் வாழியவே.

4. மதிமகிழு மணவாளமா முனிகள் சுருதியினால்
மனமகிழ வந்த பெருமாள்
மதிளரங்கேசரிட மணிகிரண
நவரத்தின மகுடந் தரித்த பெருமாள்
விதி வச்சிரபாணி முதல் முப்பத்து முக்கோடி
தேவர்கள் விதித்த பெருமாள்
விஷ்ணுமணி கிருஷ்ண குலரெக்ஷண விசக்ஷண
விலக்ஷண மறிந்த பெருமாள்
நிதிகோடி தேடிவரும் நித்தியகுல பிரகலா தருக்கு
நிலவரஞ்செய்த பெருமாள்
நால் வேதம் நாற்பத்தெண்ணாயிரம் இருஷிகள்
ஆதரினவந்த பெருமாள்
சுருதி மதுரகவி யாழ்வார்கள் அனைவரும்
தோத்திர பிரபவந்தமிடவே
சுகவசன மனமகிழ வேதநாராயணர்
திருவடிகள் வாழியே.

5. கனகமணி கசித நவகன சொம்பு
மகரக்கொழைகள் தூரிதிருநாமமுங்
கல்யாணமான புஜசங் சக்கிரங்களும்
கர்ணவதம் சங்கஜம்
கனகநககிரி திண்டுதலகாணியும்
கமனியவடிவில்லையுங் கண்டாரமாலையும்
குண்டலக் கடுக்கனும் காஞ்சிமணிகடிசூத்ரமும்
ஜனக குலமணி சீதாபிராட்டியார் சிங்கார
மணிமாலையுஞ்
சகன் மோகனகரமான பாண்டியம் கொண்டையுஞ்
சவுந்தரிய திருவாசியும்
வனசமுனிமதிமேவு வேதநாராயணன் மனமகிழ
வேயளித்தான் வகுள பூஷண ராசமணி
சக்கரவர்த்தி வசுமதியில்மிக வாழியே.

சில தனிச் செய்யுளும்-கட்டியமும்

பிரமோற்சவம் 10ஆம் திருநாள் அனுஸந்திக்கப் படும் தலப்பெருமாள் பெருமை கூறும் நூலில் (20—6—45ல் அர்ச்சகம் கோபாலகிருஷ்ணய்யங்காரால் எழுதப்பட்ட ஏட்டுப் பிரதியிலிருந்து எடுக்கப் பட்டவை). இந்த ஏட்டுப் பிரதியைத் தந்து உதவியவர் பட்டர் ஸ்ரீ உ. வே. S. கோபாலகிருஷ்ணய்யங்கார் சுவாமி என்பவராவார்.

1. திருவாழி திருச்சங்கு தரித்தோன் வாழியே!
2. திருவேதநாயகியைச் சேர்ந்தோன் வாழியே!
3. பெரியாழ்வார் பல்லாண்டு புகழ்ந்தோன் வாழியே!
4. பேரருளாளன் ஜீயர் பணிந்தோன் வாழியே!
5. மறுவாற் மணவாள யோகிதந்த மதிள்
அரங்க மந்திரத்தை மனதில் வைத்து
திருவேதநாராயணபுரத்தில் வாழும்
சீர்வேதநாரணன் தாள் வாழி.

"ஸ்ரீ வைகுண்ட நிகேத நோ ஜலநி தௌ சேஷாங்சாயி ஹரி:
காவேரீ கலசாம்பு ராசீ ஸரஸி ஸ்ரீ கூர்ம பீடேஸ்தித: |
ஸ்ரீ சைலாந்வித பங்க ஜோத்பவ குரு: ப்ரக்லாத ஸம்பூஜித:
ஸ்ரீமான் ஆச்ரிதரக்ஷ கோ விஜயதே ஸ்ரீ வேதநாராயண: பர: |"

(இந்த ஏட்டு பிரதி நூலில் ஸ்ரீ வேதநாராயணைப் பற்றிய அழகான வருணனையும் செய்யப்பட்டுள்ளது).

வேதநாராயணர் ஸ்தோத்திரப் பொருள்

(பிரகலாதன் செய்ததாகக் கூறப்படும்
துதியின் தமிழ் உரை)

---

1 ஸ்வாமி பகவானே! நீர் மதத்துக்கெல்லாம் ஈஸ்வரராக வும், பரம புருஷராகவும், பிரகிருதிக்கு பரமாத்மாவாக வும் இருக்கிறீர். உம்முடைய ஸங்கல்பத்தினால் நாபியில் இருந்து கமலம் உண்டானது. அந்தக் கமலத்திலிருந்து சதுர்முகன் உண்டானர்.

2 ஸ்வாமி! ராமாபதியே! உம்முடைய முகத்திலிருந்து இந்திரன், அக்னி, பிராமணர் உண்டானார்கள். உம்மு முடைய நேத்திரத்திலிருந்து சூரியன் உற்பத்தியானான். இருதயத்திலிருந்து சந்திரன் உண்டானன்.

3 இருதயத்திலிருந்து பிராண வாயுக்களும், கர்ணத்து வயங்களில் இருந்து திக்குகளும், புஜங்களில் இருந்து ராஜாக்களும், நாபியில் இருந்து அந்தரிக்ஷங்களும் உற்பவித்தார்கள். சிரசிலிருந்து ஸ்வர்க லோகங்களும் உண்டாயின.

4 எந்த எந்த அங்கத்தினின்றும் எவரெவர் உண்டாயினரோ அந்த அந்த அங்கத்தை அவரவர் ஆஸ்ரயித்து இருக்கின் றனர்.

5 ஆறு குணத்துக்கு மேம்பட்டவரே! ஷாட் குண்ய மூர்த்தியே! குண பரிபூர்ணமானவரே! தெரிந்தும், தெரியாமலும், அணுவினும் மகாமேருவிலும் வாசம் செய்கிற உமக்கு நமஸ்காரம்.

6 எங்கும் நிறைந்தும் எல்லாவற்றிற்கும் குருவான உமக்கு நமஸ்காரம். ஸ்வாஹாரூபமாகவும், ஸ்த்ரீரூபமாகவும், காரியமாகவும் கர்த்தாவுமாகிய உமக்கு நமஸ்காரம்.

7 ஈச்வரராகவும், ஈச்வர ஸ்வரூபமாகவும், உள்ளும் புறமும் வியாபித்தும், காரணமாகியும், காரியமாகியும் பரவஸ்துக் கெல்லாம் முதன்மையானவரும் பிர்ம்ம ரூபியுமான உமக்கு நமஸ்காரம்.

8 ஐந்து மூர்த்தியான உமக்கு நமஸ்காரம். ஐந்து பூதங் களின் வடிவான உமக்கு நமஸ்காரம். பன்னிரண்டு சூரியன் வடிவான உமக்கு நமஸ்காரம், அனேக ஜீவாத்ம ரூபியான உமக்கு நமஸ்காரம்.

9 ஏக ரூபமாகவும், வெளியில் கால ரூபியான உமக்கு நமஸ்காரம், புருஷர்களின் மனதில் வாசம் செய்து கொண்டு பந்தம், மோக்ஷம் என்னும் இரண்டையும் அருளுகிறீர்.

10 வேதத்தின் சூரியன் போன்றவரே! உமக்கு நமஸ்காரம் வேதத்தின் தேஜஸாயிருப்பவரே! உமக்கு நமஸ்காரம் வேதத்தின் ஆத்மாவாக இருப்பவரே உமக்கு நமஸ் காரம். வேதாந்த ஞானிகளால் ஸேவிக்கப்படுகிறவரே உமக்கு நமஸ்காரம்.

11 மாயையினுல் வாசுதேவன் என்கிறவரே! பயங்கரமான ஸம்ஸாரம் என்னும் காட்டுத் தீயினுல் சிரமப்படுகிற என்னை நீர் ரக்ஷிக்கவேண்டும்.

12 லக்ஷ்மிக்கு இருப்பிடமானவரே! மலர் மகனுக்குக் குருவே! வேதத்தின் பேரில் எழுந்தருளிப்பவரே! ஆறு குணங்களுக்கு மேம்பட்டவரே! ஸ்ரீ வேதநாராயணன் என்ற பெயருடையவரே உமக்கு நமஸ்காரம்.

இந்த உரை அர்ச்சகம் ஸ்ரீ லக்ஷ்மண ஐயங்கார் எழுதியது.

வெள்ளைச் சாற்றுப்படி

" பூமன்னுமாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த
பரமன்னு மாறன் அடிபணிந்துய்ந்தவன் பல்கலையோர்
தாம் மன்னி வந்த இராமாநுசன் சரணார விந்தம்
நாம் மன்னி வாழ நெஞ்சே சொல்லுவோம்
அவன் நாமங்களே ".

ஒரு நாள் சோழ மன்னன் அவைக் களத்திலே " நாலூரான்" என்ற கூரத்தாழ்வானின் சிஷ்யன் அரசனைப் பார்த்து "தங்கள் ஸமய சாஸனத்தில் மற்றைய ஆபாச பண்டிதர்கள் கை எழுத்திட்டதென்? இராமாநுசனும், கூரத்தாழ்வாரும் அன்றோ கை எழுத்திடல் வேண்டும்" என்றனும். அது ஒரு சமய வேற்றுமை மிகுந்த கொடிய காலமாகும். நாலூரான் சொல் கேட்ட மன்னனும் திருவரங்கத்தில் உள்ள ஸ்ரீ இராமாநுசன் மடத்திற்குச் சில ஆட்களை அனுப்பி அவரை அழைத்து வரக் கட்டளை இட்டான். இந்த சமயம் உடையவர் எதிராசர், எம்பெருமானர் பெரும் பூதூர் மாமுனிகள், ஸ்ரீ பாஷ்யகாரர் என்றெல்லாம் திவ்வியத் திருநாமம் படைத்த ஸ்ரீ இராமநுசர் திருவரங்கம் பெரிய கோயிலே எழுந்தருளி இருந்து

"பாலமூக ஜடாந்தாச்ச பங்கவோ பதிரஸ்ததா |
ஸதாசார்யே ணஸந்த்ருஷ்டா: ப்ராப்னுவந்தி பராங்கதிம்"

(பெண்ணும், பேதையும், குழந்தையும், குருடனும், முடவனும், செவிடனும் நல்லாசிரியரால் பார்க்கப் பட்டால் நற்கதி அடைவார்கள்) என்கிறபடியே கூரத்தாழ்வான், முதலியாண்டான் முதலிய மகான்

களான சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் அனுக்ரஹித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் ஸ்ரீ இராமாநுசன் மடத்தில் நீராட்டம் கண்டு கொண்டிருந்தார். கூரத்தாழ்வான் தீர்த்தத்தை முகந்து கொடுத்துக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் சோழனுடைய அரசாங்க புருஷர்கள் இராமாநுசன் மடத்தேற வந்து "இராமாநுசன் எங்கே" என்று கேட்கவும் செய்தியை உணர்ந்த சில மடத்து ஸ்ரீ வைணவர்கள் நீர்முகந்து கொடுத்துக் கொண்டிருந்த கூரத்தாழ்வானின் இரகசியமாக இச் செய்தியை உணர்த்தினர். ஆழ்வாரும் ஆசாரிய நியமனம் இன்றிக்கே ஸ்ரீ இராமாநுசனுடைய காவி ஆடையைத் தாம் சாற்றிக்கொண்டு சோழன் சபைக்குச் சென்று விட்டார். இச் செய்தியை அறிந்த இராமாநுசனுடைய முதல் குருவான பெரிய நம்பிகளும் தள்ளாத வயதில் இராமாநுசனிடத்தில் உள்ள பரிவால் ஆழ்வாருடன் சென்றார். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அக்காலத்தில் சமய வேற்றுமை வெறியல்லவா? நீராட்டம் முடிந்ததும் இராமாநுசன் அங்குள்ள சிஷ்யர் களிடம் காஷாய ஆடையைத் தரும்படி கேட்டார். அருகே இருந்த சீடர்கள் முன்பே கூரத்தாழ்வான் அதைச் சாற்றிக்கொண்டு எழுந்தருளிவிட்டார் என்றார்கள். "ஆகில் அவருடைய வெள்ளை ஆடையைத் தாருங்கோள் எனக் கேட்ட ராமாநுசர் பெரிய நம்பிக் கும், ஆழ்வாருக்கும் தீங்கொன்றும் ஏற்படாமல் இருக்க வேண்டுமே என்று உள்ளம் வெதும்பி இருந்தார். ஒருவாறு நிகழ்ச்சியின் காரணத்தை அறிந்த கொண்ட இராமாநுசர் பெரிய பெருமாளிடம் அனுமதி பெற்றுத் திருநாராயணபுரத் (மைசூர் மேல் கோட்டை) திற்கு வெள்ளை (ஆடையை) சாற்றிக்கொண்டு எழுந்தருளி விட்டார்.

ஆழ்வார்கள் திருநக்ஷத்திரங்கள்

வரி	திதி வருஷம்	ஆழ்வார்	திருநக்ஷத்திரம்	ஊர்	பிரபந்தம்
1	சு. அஷ்டமி (BC 4202)	பொய்கை ஆழ்வார்	ஐப்பசித் திருவோணம்	திருவஃகா	100
2	சு. நவமி (BC 4202)	பூதத்தாழ்வார்	ஐப்பசி–அவிட்டம்	திருக்கடன்மல்லை	100
3	சு. தசமி (BC 4202)	பேயாழ்வார்	ஐப்பசி–சதயம்	மயிலை	100
4	கி. பிரதை (BC 3122)	திருமழிசைப்பிரான்	தை–மகம்	திருமழிசை	216
5	பௌர்ணமை (BC 3102)	நம்மாழ்வார்	வைகாசி–விசாகம்	ஆழ்வார் திருநகரி	1296
6	பௌர்ணமை (BC 2225)	மதுரகவிகள்	சித்திரை–சித்திரை	திருக்கோளூர்	11
7	சு. துவாதசி (BC 3074)	குலசேகராழ்வார்	மாசி–புனர்வசு	திருவஞ்சிக்களம்	105
8	சு. ஏகாதசி (BC 3055)	பெரியாழ்வார்	ஆனி–சுவாதி	ஸ்ரீவில்லிபுத்தூர்	473
9	சு. சதுர்த்தசி (BC 3005)	ஸ்ரீ ஆண்டாள்	ஆடி–பூரம்	,,	173
10	கி. சதுர்த்தசி (BC 2813)	தொண்டரடிப்பொடி	மார்கழி–கேட்டை	திருமண்டங்குடி	55
11	கி. துவதியை (BC 2760)	திருப்பாணாழ்வார்	கார்த்திகை–ரோகிணி	உறையூர்	10
12	பௌர்ணமை (BC 2705)	திருமங்கைமன்னன்	கார்த்திகை–கார்த்திகை	திருக்குறையலூர்	1361
			(மடல் எண்ணிக்கையில் கருத்து வேற்றுமை உண்டு)		
13	ஆழ்வார் வரிசையில் சேராத–அமுதனார்		பங்குனி–அத்தம்	திருவரங்கம்	108

ஆழ்வார்களின் அம்சங்கள்

1.	பொய்கை ஆழ்வார்	சங்கு (பாஞ்சஜன்யம்)
2.	பூதத்தாழ்வார்	கதை (கௌமேவுகி)
3.	பேயாழ்வார்	கத்தி (நந்தகம்)
4.	திருமழிசையாழ்வார்	சக்கரம் (சுதர்சனம்)
5.	நம்மாழ்வார்	ஸேனை முதலி (விஷ்வக் ஸேனர்) யார்
6.	மதுரகவிகள்	குமுதர்
7.	குலசேகராழ்வார்	கௌஸ்துபம்
8.	பெரியாழ்வார்	கருடன் (பெரிய திருவடி)
9.	ஸ்ரீ ஆண்டாள்	பூமிப்பிராட்டி
10.	தொண்டரடிபொடி	வனமாலை
11.	திருப்பாணாழ்வார்	ஸ்ரீவத்ஸம்
12.	திருமங்கை ஆழ்வார்	வில்லு
13.	ஸ்ரீராமாநுசன்	ஆதிசேஷன், ஸேனை முதலியார், பஞ்சாயுதம்

தவிர்க்க வேண்டியவை

1. ஸ்னானம் செய்யாமல் பெருமாள் சன்னிதிக்குள் செல்லுதல்
2. ஈர வஸ்த்திரத்துடன் செல்லுதல்
3. கை கால் அலம்பாமல் செல்லுதல்
4. ஸருதகம், ஆசௌசதில் செல்லுதல்
5. தலை விரித்துக்கொண்டு, தலையைப் போரித்திக் கொண்டு செல்லுதல்
6. மேல் ஆடை, சட்டை போட்டுக் கொண்டு பாழ் நெற்றியுடன் செல்லுதல்
7. காலில் செருப்புடன் செல்லுதல்
8. வாகனம் ஏறிச் செல்லுதல்
9. குடை பிடித்துச் செல்லுதல்
10. வெற்றிலை பாக்கு சுவைத்தல், காரி உமிழ்தல், குப்பை போடுதல்
11. மயிர் கோதி முடித்தல், மலஜலம் கழித்தல்
12. சூதாடுதல், அதிர்ந்து பேசுதல், சிரித்து விளையாடுதல், சண்டையிடுதல்
13. வம்பு பேசுதல், தகாதவர்களுடன் செல்லுதல்
14. காலை நீட்டிக்கொண்டு படுத்தல்
15. சுவாமிக்கும் பலி பீடத்திற்கும் இடையே செல்லுதல்
16. பிரதக்ஷிணம் செய்யும்பொழுது அதிர்ந்து நடத்தல்
17. பெருமாளுக்கு சமர்ப்பிக்கும் உபஹாரங்களை அலம்பாமல் எடுத்துச் செல்லுதல்
18. கோவில்களில் சங்கீதம் முதலியவைகளைக் கேட்கச் சென்று பெருமாளை சேவிக்காமல் திரும்புதல்
19. துளஸியை அலம்பி எடுத்துச் செல்லுதல்
20. பெருமாளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரசாதத்தில் குறை கூறுதல்
21. ஒரு கையுடன் வணங்குதல், கன்னத்தில் அறைந்து கொள்ளுதல், தலையில் குட்டிக் கொள்வது

முடிவுரை

"என்னை வாரமாக்கிவைத்தான், வைத்ததின்றி என்னுள் புகுந்தான்" என்றபடிக்கு எதுவும் அவருடைய திவ்விய ஸங்கல்பத்தாலேதான் நடக்கிறது என்றும் அவனே கர்த்தாவாகி நின்று நம்மை தம் காரியத்தில் கருவியாக்கிக் கொள்கிருன் என்பதும் சித்தாந்த சாரமானதால் அந்தத் தனிப்பெரும் தலைவனாகிய ஸ்ரீயாபதியான ஸ்ரீ வேதநாராயணன் குறியோடும் புழு போன்ற அடியேனை ஒரு பொருளாக்கித் தன் திவ்ய வைபவத்தை அடியேனைக் கொண்டு தானே எழுதித் தரஸங்கல்பித்துத் தலைக்கட்டித் தந்தபடிக்கு ஸ்ரீ வேதநாயகி ஸமேத ஸ்ரீ வேதநாராயணன் துயரறு சுடாடிகளில் இந்த ஸ்தல புராணமாகிற புஷ்பாஞ்சலியை அடிபணிந்து ஸமர்ப்பித்து தன்யன் ஆகுகிறேன். குற்றம் குறை இருப்பின் அதுவும் இந்தச் சேதனுடைய அக்ஞானத்தால் ஏற்பட்டதெனக் கொண்டு பெரியோர்கள் மன்னித்தருள வேண்டுகிறேன். ஆழ்வார் திருவடிகளே சரணம்.

"அடியார்க வாழ! அரங்கநகர் வாழ!
சடகோபன் தண்டமிழ் நூல் வாழ!
கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ!
மணவாள மாமுனியே இன்னும் ஒரு நூற்றாண்டிரும்"

By

N. S. Tatachariar,

8—9—1966 K. H. School, Tanjavur,

திவ்யப்ரபந்தம் எண்ணிக்கை

	பெயர்	எண்	அருளியவர்	சாரம்
முதலாயிரம்				
1	திருப்பல்லாண்டு	12	பெரியாழ்வார்	ஓம் ப்ரணவாரம்
2	பெரியாழ்வார் திருமொழி	461	,,	பாகவத ஸாரம்
3	திருப்பாவை	30	ஸ்ரீ ஆண்டாள்	108 உபநிஷத் ஸாரம்
4	நாச்சியார் திருமொழி	143	,,	,,
5	பெருமாள் திருமொழி	105	குலசேகராழ்வார்	ராமாயண ஸாரம்
6	திருச்சந்த விருத்தம்	120	திருமழிசை ஆழ்வார்	பாலசாஸ்திர ஸாரம்
7	திருமாலை	45	தொண்டரடிப்பொடி ஆழ்வார்	வேதாந்த ஸாரம்
8	திருப்பள்ளி எழுச்சி	10	,,	,,
9	அமலனாதிபிரான்	10	திருப்பாணாழ்வார்	ஓம் ப்ரணவஸாரம்
10	கண்ணிநுண் சிறுத்தாம்பு	11	மதுரகவிகள்	நம: சப்தஸாரம்
இரண்டாவது ஆயிரம் (பெரிய திருமொழி)				நாராயண மந்திரத்தின் ஸாரம்
11	பெரிய திருமொழி	1084	திருமங்கை ஆழ்வார்	சினக்ஷயின் ஸாரம்
12	திருக்குறுந்தாண்டகம்	20	,,	வியாகரண ஸாரம்

	பெயர்	எண்	அருளியவர்	சாரம்

மூன்றாவது ஆயிரம் (இயற்பா)

	பெயர்	எண்	அருளியவர்	சாரம்
13	திருநெடுந்தாண்டகம்	30	,,	சந்தஸ் ஸாரம்
14	முதல் திருவந்தாதி	100	பொய்கை ஆழ்வார்	விஷ்ணுதத்துவ ஸாரம்
15	இரண்டாம் திருவந்தாதி	100	பூதத்தாழ்வார்	,,
16	மூன்றாம் திருவந்தாதி	100	பேயாழ்வார்	நாம மகிமை
17	நான்முகன் திருவந்தாதி	96	திருமழிசை ஆழ்வார்	பரதத்துவ ஸாரம்
18	திருவிருத்தம்	100	நம்மாழ்வார்	ருக்வேத ஸாரம்
19	திருவாசிரியம்	7	,,	யஜுர்வேத ஸாரம்
20	பெரிய திருவந்தாதி	87	,,	அதர்வணவேத ஸாரம்
21	திருஎழுக் கூற்றிருக்கை	1	திருமங்கை ஆழ்வார்	நிருக்த ஸாரம்
22	சிறிய திருமடல்	77½	,,	ஜோதிஷ ஸாரம்
23	பெரிய திருமடல்	148½	,,	கல்பஸாரம் & நாராயண மந்திர ஸாரம்

நான்காவது ஆயிரம் (திருவாய் மொழி)

	பெயர்	எண்	அருளியவர்	சாரம்
24	திருவாய் மொழி	1102	நம்மாழ்வார்	ஸாமவேத ஸாரம்

அனுபந்தம்

திருமங்கை மன்னன் அருளிச் செய்த பெரிய திருமொழி

முதற் பதிகம்

நாராயண மந்திரத்தின் பெருமை

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் பெரும் துயர்
இடும்பையில் பிறந்து,
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு அவர் தம் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் உணவு
பெரும் பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணா
என்னும் நாமம் (1)

ஆவியே! அமுதே! என நினைந்து உருகி அவரவர்
பணை முலை துணையா
பாவியேன் உணராது எத்தனை பகலும் பழுது போய்
ஒழிந்தன நாள்கள்
தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும் சூழ்புனல்
குடந்தையே தொழுது என்
நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன் நாராயணா
என்னும் நாமம் (2)

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித் தெரிவைமார்
உருவமே மருவி
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் ஒழிந்தன
கழிந்த அந்நாள் கள்
காமனார் தாதை நம்முடை அடிகள் தம்மடைந்தார்
மனத்து இருப்பார்
நாமம் நான் உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம் (3)

வென்றியே வேண்டி வீழ் பொருட் கிரங்கி வேல்கணார்
கலவியே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினை;டையே என்செய்கேன்
நெடுவிசும் பணவும்
பன்றியாய் அன்று பார் அகம் கீண்ட பாழியான்
ஆழியான் அருளே
நன்று நான் உய்ய நான் கண்டு கொண்டேன் நாராயணா
என்னும் நாமம் (4)

கள்வனேன் ஆனேன் படிறு செய்து இருப்பேன்
கண்டவாதிரி தந்தேனலும்
தெள்ளியேன் ஆனேன் செல்கதிக்கு அமைந்தேன்
சிக்கனத் திருவருள் பெற்றேன்
உள் எலாம் உருகிக் குரல் தழுத்து ஒழிந்தேன்
உடம்பெலாம் கண்ண நீர் சோர
நள் இருள் அளவும் பகலலும் நான் அழைப்பன்
நாராயணா என்னும் நாமம் (5)

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் எனக்கு
என்னுடை வாணாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவர் உயிர் செகுத்த
எம் அண்ணல் வல்புலாம் சோலை மாமதின் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான் கண்டு கொண்டேன் நாராயணா
என்னும் நாமம் (6)

இற்பிறப்பறி யீரிவ ரிவ ரென்னீரின்னதோர் தன்மை
என்று உணரீர்
கற்பகம் புலவர்களை கண் என்றுலகில் கண்டவா
தொண்டரைப்பாடும்
சொற் பொருளாளீர் சொல்லுகேள் வம்மின் சூழ்புனல்
குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்மின் நாராயணா
என்னும் நாமம் (7)

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும் கருத்துளே
திருத்தினேன் மனத்தை
பெற்றிலேன் அதனால் பேதையென் நன்மை
பெருநிலத்து ஆருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன்
செல்கதிக்கு உய்யுமாறெண்ணி
நற்றுணையாகப்பற்றினேன் அடியேன் நாராயணா
என்னும் நாமம் (8)

குலம்தரும், செல்வம் தந்திடும் அடியார் படுது யாராயின்
எல்லாம்
நிலம் தாம் செய்யும் நீள்வி சிம்பு அருளும் அருளொகு
பெருநிலமளிரும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம் (9)

மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர் மங்கையார் வாள்
கலிகன்றி
செஞ் சொலால் எடுத்த தெய்வ நன் மாலை
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும் போதனமிழன் துயர்வரில் நினைமின் துயரிலீர்
சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு நாராயணன்
என்னும் நாமம் (10)

வாடி, ஆவி, சேமம், வென்றி, கள்வன், எம்பிரான், இற்பிறப்பு, கற்று, குலம், மஞ்சு.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அருள்மிகு வேதநாராயணப்பெருமாள் திருக்கோயில்

திருநாராயணபுரம்

திருக்கோயிலில் பணியாற்றிய அறங்காவலர்கள் காலமும் பெயரும்

1.	திரு. ரெகுநாத அய்யர்	1905	ஆண்டு
2.	,, சுப்பிரமணிய அய்யர்	1915	,,
3.	,, ராமசாமி ஐயங்கார்	1915	,,
4.	,, அருணாசலம் பிள்ளை	1915	,,
5.	,, S. ரகுநாத ஐயங்கார்	1928	,,
6.	,, N. S. வாசுதேவம் பிள்ளை	1938	,,
7.	,, கஸ்தூரிரெங்க ஐயங்கார்	1938	,,

8. ,, கே. முத்து ரெட்டியார்
26—8—1938 முதல் 5 ஆண்டுகள்

9. ,, கே. நவநீதம் நாயுடு
5—2—1941 முதல் 5 ஆண்டுகள்

10. ,, பி. எம். ஆர். சுந்தரராஜ ரெட்டியார்
12—3—1942 முதல் 5 ஆண்டுகள்

11. ,, எம். பி. கிருஷ்ணசாமி பிள்ளை
13—5—1944 முதல் 5 ஆண்டுகள்

12. ,, எம். பி. கிருஷ்ணசாமி பிள்ளை
22—6—1949 முதல் 5 ஆண்டுகள்

13. ,, கே. நடேசம் பிள்ளை
31—12—1951 முதல் 5 ஆண்டுகள்

14. ,, டி. ஏ. புஷ்பநாதம் பிள்ளை
31—12—1951 முதல் 5 ஆண்டுகள்

15. ,, எஸ். பி. தங்கவேலு, பி.ஏ , பி.எல்.,
26—7—1955 முதல் 5 ஆண்டுகள்

16. ,, கே. நடேசம் பிள்ளை
12—3—1957 முதல் 5 ஆண்டுகள்

17. ,, டி. ஏ. புஷ்பநாதம் பிள்ளை
12—3—1957 முதல் 5 ஆண்டுகள்

18. ,, கே. நடேசம் பிள்ளை
1—4—1962 முதல் 5 ஆண்டுகள்

19. ,, டி. ஏ. புஷ்பநாதம் பிள்ளை
1—4—1962 முதல் 5 ஆண்டுகள்

20. ,, எஸ். பி. தங்கவேலு, பி.ஏ., பி.எல்.,
6—9—1960 முதல் 5 ஆண்டுகள்

21. ,, எஸ். பி. தங்கவேலு பி.ஏ., பி.எல்.,
15—9—1965 முதல் 5 ஆண்டுகள்

22. ,, டி. ஏ. புஷ்பநாதம் பிள்ளை
15—7—1967 முதல் 5 ஆண்டுகள்

23. ,, பி. கதிரேசன்
15—7—1967 முதல் 5 ஆண்டுகள்

24. ,, எஸ் கே. வடிவேலு
30—6—1971 முதல் 3 ஆண்டுகள்

25. ,, கே. ஜனகராஜன் ரெட்டியார்
25—9—1972 முதல் 3 ஆண்டுகள்

26. ,, டி. என். நமசிவாயம் பிள்ளை
25—9—1972 முதல் 3 ஆண்டுகள்

27. ,, எஸ். கே. வடிவேலு
28—9—1974 முதல் 3 ஆண்டுகள்

திருக்கோயிலில் பணியாற்றிய நிர்வாக அதிகாரிகள் காலமும் பெயரும்

1. திரு. டி. எம். ஆறுமுகம் பிள்ளை
23—1—1948 முதல் 10—7—1954

2. ,, டி. என். நமசிவாயம் பிள்ளை
11—7—1954 முதல் 4—9—1954

3. ,, ஆர். முருகேசன், பி.ஏ.,
5—9—1954 முதல் 31—3—1956

4. ,, டி. எம். ராமசாமி, பி.ஏ., எல்.டி.,
1—5—1956 முதல் 24—2—1961

5. ,, என். ராஜமாணிக்கம்
25—2—1961 முதல் 5—6—1961

6. ,, டி. எம். ராமசாமி, பி.ஏ., எல்.டி.,
6—6—1961 முதல் 23—8—1962

7. ,, எஸ். மகாராஜன், பி.ஏ., பி.டி.,
(கூடுதல் பொறுப்பு)
24—8—1962 முதல் 27—9—1962

8. ,, என். சீனிவாசன், பி.ஏ., பி.எல்.,
28—9—1962 முதல் 21—6—1963

9. ,, எஸ். மகாராஜன், பி.ஏ., பி.டி.,
(கூடுதல் பொறுப்பு)
22—6—1963 முதல் 29—7—1963

10. ,, எஸ். சோமசுந்தரம், பி.ஏ., பி.எல்.,
30—7—1963 முதல் 17—3—1964

11. ,, ஏ. ஏ. வெங்கடாசலம், பி.ஏ.,
18—3—1964 முதல் 4—7—1967

12. ,, வி. வாசகப்பெருமாள், பி.காம்., பி.எல்.,
5—7—1967 முதல் 30—11—1967

13. „ ஏ. சீதாராமன், பி.ஏ , பி.எல் ,
1—12—1967 முதல் 4—11—1968

14. „ ஏ. மல்லிகேஸ்வரன், பி.ஏ.,
(கூடுதல் பொறுப்பு)
5—11—1968 முதல் 4—12—1968

15. „ டி. புருஷோத்தமன்
5—12—1968 முதல் 26—5—1969

16. „ சி. வி. ராசாராம், பி.ஏ., பி.எல்.,
27—5—1969 முதல் 12—11—1973

17. „ வி. வாசகப்பெருமாள், பி.காம்., பி.எல்.,
13—11—1973 முதல் 3—4—1975

18. „ ஆர். வெங்கட்ராமன்,
(முசிறி வட்ட ஆய்வர் – கூடுதல் பொறுப்பு)
4—4—1975 & 5—4—1975

19. „ எஸ். கந்தசாமி, 6-4-1975 முதல் 3-4-1976

20. „ ஆர். கந்தவேல், பி.ஏ.,
(கூடுதல் பொறுப்பு)
4—5—1976 முதல் 22—7—1976

21. „ எஸ். ஆறுமுகம், பி.ஏ.,
23—7—1976 முதல் 5—12—1978

22. „ எஸ். மகாராஜன், பி.ஏ , பி.டி.,
6—12—1978 முதல்

நோபிள் பிரஸ், திருச்சி–620 002